# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஒக்டோபர் 25 இதழ் - 80









**ஜனாதிபதித் தேர்தல் - 2019: ஒரு தமிழனின் பார்வையில்**

பக்கம் - 05



**கிழக்கு மக்கள் யாருக்கு வாக்களிப்பது?**

இந்த ஜனாதிபதித் தேர்தலில் எதனை அடிப்படையாகக் கொண்டு.


பக்கம் - 02



**ஜனாதிபதி தேர்தல்-யாரிந்த ஜேவிபியினர்?**

கடந்த யூலை 18ஆம் திகதியன்று காலிமுக திடலில்

பக்கம் -06



**சாதியமும் குடியும் - கிழக்குக் கரையின் தாய்வழிப் பாரம்பரியம்**

சிலவாரங்களுக்கு முன் கொம்புமுறி பற்றிய உரையாடலொன்றில் ஈடுபட்டிருந்தோம்.

பக்கம் -11



# 'யாருக்கு வாக்களிக்கக் கோருவது என்று இன்னும் முடிவில்லை' -- இரா. சம்பந்தன்

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்களில் யாருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது குறித்துத் தற்போதைக்குக் கூற முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அவதானித்துவிட்டு தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பிரதான கட்சிகள் எவ்வாறு முன்வைக்கின்றனர் என்ற காரணிகளை அவதானித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் சம்பந்தன் கூறியுள்ளார்.

யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கொழும்பில் கடந்த புதன்கிழமை நடத்திய கலந்துரையாடலின் பின்னர் சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

வேட்பாளர்களிடம் கையளிப்பதற்காக பதின்மூன்று அம்சக் கோரிக்கைகளைத் தயாரித்து அதில் கையொப்பமிட்ட ஐந்து தமிழ் கட்சிகளும் கொழும்பில் கூடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் சம்பந்தன் கூறினார்.

பதின்மூன்று அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு பிரதான வேட்பாளர்களுக்கு அவகாசம் வழங்கப்படுமென்றும் அதனடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படுமென்றும் சம்பந்தன் கூறினார்.

புதன்கிழமை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் ஆனாலும் பிரதான வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சார மேடைகளில் கூறி வரும் கருத்துக்கள் தொடர்பாக ஆராய்ந்ததாகவும் சம்பந்தன் கூறினார்.

# மின்னேரிய கோரவிபத்தில் காரைதீவைச்சேர்ந்த இருபெண்கள் படுகாயம்!



(காரைதீவு நிருபர் சகா)

மின்னேரியாவில் புதன் இரவு இடம்பெற்ற கோர பஸ் விபத்தில் காரைதீவைச்சேர்ந்த பொதுச்சுகாதார மருத்துவமாதர் இருவர் படுகாயமுற்றுள்ளனர்.

பொதுச்சுகாதார மருத்துவமாதர்களான திருமதி குமுதினி புவனேந்திரராஜா, திருமதி சசிகுமார் ஆகியோரே இவ்விதம் படுகாயமுற்றவர்களாவர். இவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தற்சமயம் பெண்கள் வார்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பில் புதனன்று(23) இடம்பெற்ற யூனியன் கூட்டத்தில் கலந்துகொண்டு இரவு பஸ்ஸில் கல்முனை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தவேளையில் இக்கோரவிபத்து சம்பவித்துள்ளது.

சாரதியின் பின்னாலுள்ள முன்வரிசை ஆசனத்தில் இவர்கள் அமர்ந்து பயணித்துள்ளார்கள். இவர்களுடன் மாவடிப்பள்ளியைச் சேர்ந்த மற்றுமொரு மருத்துவமாதும் காயமுற்றதாகத் தெரிகிறது. இவ்விபத்தில் பஸ் சாரதி ஸ்தலத்திலே மரணமானதாகவும் இரு பஸ்களிலும் பயணித்த சுமார் 60 பேரளவில் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து கல்முனைநோக்கி வந்துகொண்டிருந்த கல்முனை டிப்போ பஸ்சுடன் கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற தனியார் பஸ் மோதியதன் காரணமாக இக்கோரவிபத்து நள்ளிரவுதாண்டி 12.35 மணியளவில்

தொடர்ச்சி பக்கம். 15

# ஜனாதிபதி தேர்தல் - 1,485 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புபட்ட சட்ட விதிகளை மீறியமை குறித்து கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்த 24 மணித்தியால காலப்பகுதிக்குள் 126 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது வரையில் ஆணைக்குழுவிற்கு 1,485 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புபட்ட சட்டவிதிகளை மீறல் தொடர்பான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவற்றுள் 10 வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படும்



ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகள் இன்று தபால் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட இருக்கின்றன. அடுத்த மாதம் 3 ஆம் திகதி வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் உத்தியோகபூர்வ தினமாகும். நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அருகில் உள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான அட்டைகளை பிரசுரிக்கும் நடவடிக்கை அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒரு கோடி 70 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மக்கள் யாருக்கு வாக்களிப்பது?



இந்த ஜனாதிபதித் தேர்தலில் எதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்கள் வாக்களிப்பது என்பது குறித்து இங்கு ஒரு பெரும் குழப்பமே காணப்படுகின்றது.

ஆளாளுக்கு ஒரு கருத்தும் கட்சிக்குக் கட்சி ஒரு காரணமும் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இவை குறித்து பல ஊடகங்களிலும் பல வகையிலான கருத்துக்கள் ஏற்கனவே செய்தியிடப்பட்டு வந்துள்ளன. ஆனால், கிழக்கு மாகாண மக்கள் என்ன செய்வது எதனை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுப்பது என்பது குறித்து எவரும் எந்த ஊடகமும் பெரிதாக அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை.

பொதுவாக வடக்குத் தலைமையைக் கொண்ட தமிழ்க்கட்சிகள் வழமையான தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை என்ற விடயங்களை அடிப்படைகளாக முன்வைத்துள்ளன. இன்னும் கொஞ்சம் மேலே போய் இவை வடக்கு கிழக்கு இணைப்பு, கூட்டாட்சி என்று பேசியும் வருகின்றன.

இவை குறித்து போட்டியிடும் வேட்பாளர்களுடன் அதுவும் முதல் இரண்டு வேட்பாளர்களிடம் பேசி முடிவெடுக்கப்போவதாகக் கூறிவருகின்றன.

உண்மையில் இது மக்களை ஏமாற்றும் வேலையோ என்ற அச்சம் இந்த விடயத்தில் எழாமல் இல்லை. ஏனெனில் இவை குறித்து இவை வேட்பாளர்களிடம் முன்னதாகவே பேசியிருக்க வேண்டும். அதனைவிடுத்து, இனிமேல் பேசப்போவதாக் கூறுவதெல்லாம் ஒன்றும் ஏற்கக்கூடிய விடயமாகத் தெரியவில்லை. காலங்கடந்துவிட்டதாகவே தெரிகிறது.

அதுமாத்திரமல்லாமல், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, கூட்டாட்சி போன்ற விடயங்களில் எல்லாம் இனிமேல் பேசி இருக்கும் குறுகிய காலத்தில் எதனையும் இங்கு தீர்வாகப் பெற்றுவிடமுடியாது.

உண்மையில் தாம் ஒன்றாகச் சேர்ந்து பலம் காட்டி பேரம் பேசும் தகமையை இந்தக் கட்சிகள் ஏற்கனவே இழந்துவிட்டன என்றே தெரிகிறது. ஏனென்றால் இரு முன்னணி வேட்பாளர்களுமே இவர்களை இதுவரை பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. ஆகவே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ற பேரத்தை இந்தத் தேர்தல் இந்தத் தமிழ்க்கட்சிகள் செல்லாக்காசாக ஏற்கனவே ஆக்கிவிட்டன.

அதுவும் கிழக்குத் தமிழர் பிரச்சினைகள் குறித்து இந்தக் கட்சிகள் எதுவும் பொருட்படுத்தியதாகவோ அல்லது கிழக்குத் தமிழர் அபிலாசைகளை உள்வாங்கியதாகவோ கூடத் தெரியவில்லை.

இந்த நிலையில் இலங்கை வாழ் தமிழர்கள் அனைவருக்குமான தீர்வு என்ற நிபந்தனையை இந்த ஜனாதிபதித்தேர்தலுக்கான ஒரு நிபந்தனையாக முன்வைப்பதில் தமிழ் கட்சிகள் தோல்விகண்டு விட்டன. அதுமாத்திரமல்லாமல், இந்தத்தேர்தலில் முடிவெடுப்பதற்கான ஒரு அடிப்படையாகக் கொள்ளமுடியாமலும் அவை ஆக்கிவிட்டன.

இந்தநிலையில் கிழக்கு தமிழருக்கு இந்த விடயத்தில் உள்ள ஒரே அம்சம் தற்போதைக்கு அவர்களது அபிவிருத்தியும், அவர்களது பிரதேசத்தின் வளர்ச்சியும்தான். அதனை மனதில் கொண்டே இந்த தேர்தலில் முடிவெடுக்க வேண்டியநிலைக்கு கிழக்குத் தமிழர் தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

தமது பிரதேசத்தில் தாம் சந்திக்கும் பிரத்தியேக பிரச்சினைகளை மையமாக வைத்து அவற்றை யார் தீர்த்து வைப்பார்களோ என்று ஆராய்ந்து, அதனை அடிப்படையாகக் கொண்டே யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுக்கும் நிலைக்கு கிழக்குத் தமிழர் தள்ளப்பட்டுள்ளனர்.

**சீவகன் பூபாலரட்ணம்**

குறிப்பாக தமது பிரதேச நில அபகரிப்பு, ஆக்கிரமிப்பு, பிரதேச அபிவிருத்தியில் பின்னடைவு, போரால் பாதிக்கப்பட்டவர்களின் மீட்சி ஆகியவையே இங்கு கிழக்குத் தமிழர்கள் முடிவெடுப்பதற்கான மையமாக அமைகின்றன.

இவற்றை மையமாகக் கொண்டே அவர்கள் தமது முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது.

யார் தமிழர் விரோதியோ அவரை தவிர்த்து வாக்களிக்க வேண்டும் என்றும் சிலர் வாதிடுகின்றனர். அரசியலில் நீண்ட நாள் விரோதியும் இல்லை. நண்பனும் இல்லை. இந்த வியாக்கியானந்தான் இங்கு பொருந்தும். ஏனெனில் இங்கு போட்டியில் இருக்கும் மூன்று முன்னணிக் கட்சிகளும் கடந்த காலங்களில் தமிழர் எதிர்ப்பு அரசியலில் ஈடுபட்டவைதான். தமக்குக் கிடைத்த வாய்ப்பை வைத்து முடியுமான அழவுக்கு தமிழரை புறக்கணிப்பதில் அவை ஈடுபட்டவைதான். ஆகவே இன்று இருக்கும் நிலையில் யாரை வைத்து எமது பகுதிக்கான அபிவிருத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்பதை நாம் பார்த்தாக வேண்டும். எவர் பெரிய விரோதி என்று பார்க்க முடியாது.

இதற்கு முன்னைய ஒரு ஜனாதிபதித் தேர்தலில் இரு மாவட்டங்களில் உள்ள தமிழ் மக்களை தேர்தலை பகிஸ்கரிக்க வைத்து ராஜபக்ஷ அவர்களை ஜனாதிபதி ஆக்கியவர்கள் விடுதலைப்புலிகள். அதன் விளைவு அவர்களது அமைப்பே அழிக்கப்படும் நிலை வந்தது. ஆகவே தேர்தல் புறக்கணிப்பு இங்கு பலந்தராது.

ஆனால், போர் முடிவுக்கு பிறகு வந்த அடுத்த 5 வருடங்களில் வீதிகளைப் போட்டு வடக்குக் கிழக்கின் பல இடங்களுக்கு போக்குவரத்தை கட்டமைப்பை உருவாக்குவதில் ராஜபக்ஷ சிறந்த பணியை ஆற்றியுள்ளார். அதனையடுத்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆட்சி நாட்டில் வன்செயலைக் குறைத்தது. ஆனால், முன்னைய ஆட்சியின் வேகத்தில் இவர்களால் அபிவிருத்தியைச் செய்ய முடியவில்லை. குறிப்பாக கிழக்கில் தமிழர் பகுதிகளில் அபிவிருத்தி கிட்டத்தட்ட பூச்சியம் என்றாகிவிட்டது. அதுமாத்திரமல்லாமல் தற்போதைய ஆட்சிக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களும் மிக அதிகம்.

ஆகவே அபிவிருத்தியை அடுத்த கட்டத்துக்கு யார் கொண்டு செல்வார்களோ அவர்களுக்கே கிழக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். ஊழலில்லா ஆட்சியும் எமக்கு வேண்டும்.

---



## சொல்லத் துணிந்தேன்! 23

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அவர்கள் 'வீரகேசரி'க்காக நா.தனுஜா என்பவருக்கு வழங்கிய நேர்காணலில் அமிர்தலிங்கம் மரணமடைந்த போது அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தான் வந்திருக்க முடியுமென்றும் ஆனால் தமக்கிடையில் பிளவு ஏற்படக்கூடாது என்பதன் காரணத்திற்காக மாவை. சேனாதிராசாவுக்கு அப் பதவியைத் தான் வழங்கியதாகவும் கூறியுள்ளார்.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அடுத்து 1989ம் ஆண்டின் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் அமைந்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் பெயர் கூட்டணியின் தேசியப் பட்டியலில்தான் முதலில் இடம்பெறவிருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் மட்டக்களப்பில் வைத்து தமிழர்விடுதலைக்கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தனது பெயரை அமிர்தலிங்கம் இடம்பெறச் செய்துவிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட ஏற்கனவே தீர்மானித்திருந்த அமரர்.சி.சம்பந்தமூர்த்தி அவர்களின் பெயரைத் தேசியப்பட்டியலில் உள்ளடக்கினார்.

இத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் தெரிவாகவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணிக்குக் கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனம் மட்டக்களப்பைச் சேர்ந்த அதாவது கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த சம்பந்தமூர்த்திக்கே முறைப்படி வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அது அவ்வாறில்லாமல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதற்கும் ஒரு பின்னணி உண்டு.

அக்தேர்தலில் தமிழர்விடுதலைக்கூட்டணிப்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

பட்டியலில் யாழ்மாவட்டத்தில் போட்டியிட்ட அமரர்கள் வெ.யோகேஸ்வரன் மற்றும் மு.சிவசிதம்பரம் ஆகியோருடன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட இரா.சம்பந்தனும்கூடத் தெரிவாகி இருக்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணிக்குக் கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தைத் தங்களுக்குத் தரும்படி இம்மூவரும் அடம் பிடித்தார்கள். இதுவிடயமாக இரா.சம்பந்தன், அமிர்தலிங்கம் அவர்களுடன் கடுமையாக வாக்குவாதப்பட்டுமிருந்தார். இந்தச் சிக்கலான நிலையில் அமிர்தலிங்கத்தின் நிலைப்பாடு, இத்தேர்தலில் கிழக்குமாகாணத்திலிருந்துதான் தமிழர்விடுதலைக்கூட்டணிக்கு அதிக வாக்குகள் அளிக்கப்பட்டன. எனவே இந்த ஆசனம் கிழக்கு மாகாணத்துக்கே உரியது. இதில் தீர்மானத்தைக் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள்தான் எடுக்கவேண்டும் என்பதாயிருந்தது. நியாயப்படி இவ் ஆசனம் சம்பந்தமூர்த்திக்கு உரியது என்பதால் தீர்வு அவரிடம் விடப்பட்டது. சம்பந்தமூர்த்தி அவர்கள் தான் பாராளுமன்றத்தில் இருப்பதைவிட அமிர்தலிங்கம் அவர்கள் இருந்தால் கூடுதலான பங்களிப்புச் செய்முடியும். அதனால் இவ்வாசனம் அமிர்தலிங்கம் அவர்களுக்குக் கொடுபடுமாயிருந்தால் அதற்கு மட்டுமே தனது சம்மதம் உண்டு எனத் தெரிவித்தார். சம்பந்தமூர்த்தி அவர்களின் பரந்த மனப்பான்மை இது. இதன் அடிப்படையில்தான் இத்தேசியப்பட்டியல் ஆசனம் அமிர்தலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த விபரங்களைக் காலஞ்சென்ற யோசப்பரராசசிங்கம் (மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பா.உ) அவர்களே இப்பத்தி எழுத்தாளரிடம் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் அமிர்தலிங்கத்தின் மரணத்தின் பின்னராவது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சம்பந்தமூர்த்திக்கு உரித்தான இவ் ஆசனம் அவ்வேளை சம்பந்தமூர்த்தி அவர்களும் மரணமாகி இருந்ததால் (இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை ஆதரித்துநின்ற அமிர்தலிங்கம் அவர்கள் புலிகளால் கொல்லப்பட்டார். அவருக்குத் தேசியப்பட்டியல் ஆசனத்தை விட்டுக்கொடுத்ததே அமிர்தலிங்கத்தைக் கொலை செய்த அதே புலி இயக்கத்தினரால் சம்பந்தமூர்த்தி அவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணம் என அப்போது பரவலாகப் பேசப்பட்டது). இது கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த வேறு ஒருவருக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதுவே நியாயமானது. இப்படிச் செய்யாமல் அதனை வடமாகாணத்தைச் சேர்ந்த மாவை சேனாதிராசாவுக்கு வழங்கப்படுவதற்கு உடந்தையாக இருந்த ஆனந்தசங்கரி அவர்கள் இப்போதாவது தனது தவறை உணர்ந்து இதுவும் யாழ்மேலாதிக்க சிந்தனை கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணி கிழக்குமாகாணத் தமிழர்களுக்கு இழைத்த பாரபட்சங்களில் ஒன்று என்பதை ஏற்றுக் கொள்வாரா?

கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரை அப்போதைய தமிழரசுக் கட்சியென்றாலும் சரிதான் - தொடர்ந்து வந்த தமிழர்விடுதலைக் கூட்டணியென்றாலும் சரிதான் - தமிழரசுக்கட்சி ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்றாலும் சரிதான் எல்லாமே ஒரேகுட்டையில் (யாழ்மேலாதிக்க சிந்தனையில்) ஊறிய மட்டைகளே.




## வர்த்தகத்தை மேற்கொள்ளக் கூடிய நாடுகள்: இலங்கை முன்னேற்றம்



இலகுவாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய நாடுகள் தொடர்பான உலக வங்கியின் சுட்டெண் தரப்பட்டியலில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் 190 நாடுகள் மத்தியில் இலங்கை 99 ஆவது இடத்தில் உள்ளது. 2018 ஆம் ஆண்டில் இலங்கை 100 ஆவது இடத்தில் இடம்பெற்றிருந்தது. தெற்காசிய நாடுகள் மத்தியில் இந்த சுட்டெண்ணில் இந்தியா 68 ஆவது இடத்தில் உள்ளதுடன், இந்த பட்டியலில் நியூஸ்லாந்து முதலாவது இடத்தில் உள்ளது.

வர்த்தகத்தை ஆரம்பித்தல், மின்சாரத்தை பெற்றுக்கொள்ளுதல், வர்த்தக பதிவு, கடனை பெற்றுக்கொள்ளுதல், வரி செலுத்துதல் உள்ளிட்ட 10 விடயங்களை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த மதிப்பீடு உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மாவட்டமட்ட நல்லிணக்கக் கூட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று வியாழனன்று காலை 10 மணியளவில் மாவட்டசெயலகத்தில் மாவட்டஅரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் USAID நிறுவனப் பிரதிநிதியான ரங்ககே மற்றும் நவுஸ்சாட் உட்படமாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், உதவிமாவட்டச் செயலாளர் எ. நவேஸ்வரன், பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் எஸ். அமிர்தலிங்கம், நான்கு பிரதேசசெயலகங்களின் பிரதேசசெயலாளர்கள், கிராமசேவகர்கள் மற்றும் சமூக நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் கிராமங்களில் இருந்து வருகை தந்த பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.


பல்லினமக்கள் மத்தியில் ஏற்படுகின்ற மனக்கசப்புக்கள், கிலேசங்கள் புரிந்துணர்வு இன்மை ஆகிய விடயங்களுக்கு தேவையான அறிவுரைகள் ஆலோசனைகளை கிராமமட்டத்தில் இரு சமூகங்களுக்கு இடையே வழங்குவதுடன் ஒற்றுமையை மேலோங்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இது தொடர்பாக அரசாங்கஅதிபர் மாணிக்கம் உதயகுமார் கருத்துத் தெரிவிக்கையில் இம்மாவட்டத்திற்கு 'இது மிகவும் அவசியமானதும் தேவையானதுமாகக் கருதப்படுகின்றது.



இம் மாவட்டத்திலே பல்லின சமூகம் வாழுகின்ற நிலையில் இன சமூக நல்லிணக்கத்தை மக்களின் உள்ளங்களிலிருந்து ஏற்படுத்துவதற்கு அரசசார்பற்ற இந்நிறுவனங்கள் முன்வந்து செயற்படுத்துவது என்பது ஒரு சிறப்பான விடயம் எனவும் இந்தச் செயற்திட்டத்தை உண்மையாகவே மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று, அவர்களின் மனங்களினிடையே மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது சிறந்தவிடயமாகும் எனவும் குறிப்பிட்டார்.

## இளம்பெண்ணை தீவைத்து எரித்த வழக்கில் 16 பேருக்கு மரண தண்டனை



தனது ஆசிரியர் மீது பாலியல் குற்றச்சாட்டு தெரிவித்த பிறகு, தீ வைத்து எரித்து கொல்லப் பட்ட மாணவி தொடர்பான வழக்கில் 16 பேருக்கு மரண தண்டனை விதித்து வங்கதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வங்கதேச தலைநகர் டாக்காவிலிருந்து சுமார் 160 கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஃபெனி என்ற கிராமத்தில், 19 வயதான நஸ்ரத் ஜஹான் ரஃபி எனும் மாணவி கடந்த ஏப்ரல் மாதம் தீ வைத்து எரித்து கொல்லப்பட்டார்.

நஸ்ரத்தின் மரணம் வங்கதேசத்தில் மிகப் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அதைத்தொடர்ந்து நஸ்ரத்துக்கு நீதி கோரி அந்த நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

வங்கதேசத்தை பொறுத்தவரை, இதுபோன்ற வழக்குகள் நடந்து முடிவதற்கு பல்லாண்டுகள் ஆகும். இருப்பினும், நஸ்ரத் மரணம் தொடர்பான வழக்கின் தீவிரம் காரணமாக ஆறே மாதத்தில் நடத்தி முடிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. "வங்கதேசத்தில் கொலை செய்தவர்கள் யாரும் தப்பித்துவிட முடியாது என்று இதன் மூலம் நிறுவப்பட்டுள்ளது" என்று செய்தியாளர்களிடம் பேசுகையில் வழக்கறிஞர் ஹபிஸ் அஹ்மத் தெரிவித்தார்.




# கிழக்கின் அரசியல் கட்சிகளின் அரசியலும் மக்களுக்குத் தேவையான அரசியலும்

**எழுவான் வேலன்**

நமது நாட்டில் மூன்றுவிதமான அரசியல் கட்சிப் பாரம்பரியங்களை இற்றைவரை கண்டுவந்திருக்கின்றோம். அந்தவகையில்,

1.பாரம்பரிய அரசியல் கட்சிகள் எனக் கூறப்படுபவை. இவை மக்கள் நல இயக்கமாக தொழிற்பட்டு பாராளுமன்ற அரசியலை அந்த மக்கள் நலனுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கான கருவியாக தம்மை அரசியல் கட்சியாக உருமாற்றிக் கொண்டவையல்ல. மாறாக டொனமூர் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையினை தங்கள் நலனுக்காக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு உருவான கட்சிகள்.

2.இந்தப் போக்கிற்குப் புறம்பாக 1980களுக்குப் பின்பு ஆயுதப் போராட்ட இயக்கங்களாக இருந்து பின்பு அரசியல் கட்சிகளாக மாறிய ஜே.வி.பி. மற்றும் சில தமிழ் அரசியல் கட்சிகள்.

3.இனம், மதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்த இன, மத மக்களின் வாக்குகளுக்காக உருவான அரசியல் கட்சிகள்.

மேற்படி இந்த அரசியல் கட்சிகளில் 2ம் வகைப்பாட்டிலுள்ள ஒரு சில கட்சிகளைத் தவிர மற்றக் கட்சிகள் யாவும் மக்களின் வாக்குகளைப் பெற்று கட்சி மைய அல்லது தனிநபர் மைய அரசியலை முன்னெடுப்பவைகளாக இருக்கின்றன. நாட்டைப் பற்றிய கவலைதானும் இந்தக் கட்சிகளிடம் கிடையாது. அவ்வாறு நாட்டைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றால் அது மக்களை ஏமாற்றி கட்சிநலனை அல்லது தனிநபர் நலனை பாதுகாப்பதற்காகத்தான் இருக்கின்றது.

இந்தச் சீர்கெட்ட கட்சி அரசியலின் தொடர்ச்சியை மிகவும் இழிவடைந்த நிலையில் இன்று கிழக்கில் காணக்கூடியதாக இருக்கின்றது. நான்கு அல்லது ஐந்து பேர் சேர்ந்து ஓர் அரசியல் கட்சியை ஸ்தாபிப்பதும் பத்திரிகையாளர் மகாநாடுகளை நடாத்துவதும் ஒரு பொதுவான நிகழ்ச்சியாக நடந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் தமிழ் அடையாளத்தை முன்னிறுத்திய எந்த ஒரு கட்சியும் கிழக்கில் தமிழர்களின் இருப்பையும் அடையாளத்தினையும் பாதுகாக்கத் தவறியதோடு கிழக்குத் தமிழ் மக்களின் ஆக்கபூர்வமான எந்த ஒரு எதிர்பார்ப்பையும் நிறைவேற்றவும் இல்லை. இந்த அதிருப்தியும் விரக்தியும் கிழக்கில் மாற்று அரசியல் கட்சியின் தோற்றப்பாட்டினை வேண்டி நிற்கின்றன. கிழக்கு மக்களின் இந்த அதிருப்தி நிலையினை தங்களால் நிவர்த்திக்க முடியும் என நம்புகின்றவர்கள் இவ்வாறு கட்சிகளை தோற்றுவிக்கின்றனர். இன்னும் சிலர் தங்களைப் பெரிய மக்கள் தொண்டர்களாகவும் தங்களுக்கு மக்கள் செல்வாக்கு இருக்கின்றது என்ற நம்பிக்கையிலும் உள்ளனர். அவ்வாறானவர்கள் நமக்கு எவரும் தலைவர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள். அதனால் நானே ஒரு கட்சியைத் தொடங்கி தலைவனாக இருந்தால் என்ன என்ற எண்ணத்திலும் கட்சிகளை ஆரம்பிக்கின்றனர். பிரதேச சபை உறுப்பினர்களே தங்களைப் பெருந் தலைவர்களாக எண்ணிக்கொண்டு கட்சிகளை ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு வகைதொகையின்றி புற்றீசல்களாக கிழக்கில் கட்சிகள் முளைத்திருப்பது இலங்கை அரசியலில் எங்கும் காணக் கிடைக்காத அரசியல் போக்காக இருக்கின்றது. இந்தப் போக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு எவ்விதத்திலும் ஆரோக்கியமானதல்ல என்பதை பலர் விளங்கிக் கொண்டுள்ளனர். இந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் கிழக்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மக்களை மாற்று அரசியலை முன்னெடுப்பதற்கான அழைப்பினை 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் கட்சி விடுத்து அதற்கான கூட்டத்தை 13.09.2019 அன்று மட்டக்களப்பில் நடத்தியிருந்தது.

சமூகத்தின் நிலையான அபிவிருத்தி பற்றிச் சிந்திப்பவர்கள் அந்தச் சமூகம் குறிப்பிடத்தக்க கல்வி மட்டத்தை முதலில் அடைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு இந்தக் கல்வி அடைவுமட்டம் ஓர் அடிப்படை முன்தேவையாக இருக்கின்றது. இது போன்ற ஒரு எண்ணக்கருதான் ஒரு சமூகம் அரசியல் மயப்படுத்தப்படுகின்ற போது அந்தச் சமூகத்தின் சனநாயக உரிமைகளும் அரசியல் அபிலாசைகளும் பூர்த்தி செய்யப்படுவதும் பல்லினச் சமூகத்தில் முரண்பாடுகளின்றி நல்லிணக்கத்துடன் வாழ்வதினூடாக சுபிட்சமான மகிழ்ச்சிகரமான சமூகத்தை கட்டியெழுப்புதல் என்பதுமாகும்.

எனவே ஒரு சமூகத்தின் நிலையான அபிவிருத்திக்கு கல்வியும் அதன் நிலையான அரசியல் செயல்பாட்டுக்கும் நல்லிணக்கத்துடனான மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கும் அரசியல் மயப்பாடும் அடிப்படைகளாக அமைகின்றன. ஆனால் இலங்கையிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சிதானும் இந்த அடிப்படையினை விளங்கிக் கொண்டு அரசியல் நடவடிக்கைகள் எதனையும் செய்வது கிடையாது. இந்தப் போக்கிற்கு எந்தவொரு தமிழ் கட்சியும் கூட விதிவிலக்கானதல்ல.

தமிழ் சமூகத்தினை அறிவார்ந்த சமூகமாக சிலர் எழுதுவதனையும் பேசுவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இந்த 'அறிவார்ந்த' எனும் விடயப்பரப்பினுள் அரசியல் எனும் சமூகவிஞ்ஞானம் இருப்பதாக கருதமுடியாது. அறிவார்ந்த சனநாயக அரசியல் உரையாடலுக்கும் அவ்வாறான உரையாடல் பண்பாட்டுக்கும் தமிழ் சமூகம் பழக்கப்படாத ஒன்றாகவே இருக்கின்றது. தமிழ் சமூகம் அறிவார்ந்த அரசியல் சமூகமாகவன்றி உணர்ச்சிபூர்வமான சமூகமாக சமூகமயமாக்கப்பட்டிருக்கின்றது. சாதிப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று, பிரதேசப் பற்று என்பன உணர்வு பூர்வமாக ஊட்டிவளர்க்கப்பட்ட சமூகமாகவே இருந்து வருகின்றது. அதிகார வர்க்கத் தமிழர்களின் அறிவு, இந்த உணர்ச்சிபூர்வமான விடயங்களை இலகுவில் அகற்றிவிட முடியாது அவற்றை மென்மேலும் வலுப்படுத்தி இறுக்கிப் பேணுவதின் ஊடாக தமது ஆட்சி அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் பேணுவதற்கும் உதவுவதாகவே எப்போதும் இருந்து வந்திருப்பதையும் காணலாம்.

இந்த உணர்ச்சிபூர்வமான கருத்தேற்றங்களுக்கு மாற்றான அறிவார்ந்த கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வைப்பவர்கள் மிக இலகுவாக துரோகிகளாக ஆக்கப்பட்டு அரசியல் பொதுவெளியிலிருந்து அகற்றப்படுகின்றனர். இதற்கு அதிகாரத்துவ சமூகமும் அவர்களுடைய அறிவார்ந்த ஊடகங்களும் பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பினையும் வழங்குகின்றன.

கிழக்கில் மாற்று அரசியல் பற்றிப் பேசி கட்சிகளை ஆரம்பித்து நடத்துபவாகள் எவருமே அதிகாரத்துவ வர்க்கத்தினரால் கருத்தேற்றம் செய்யப்பட்ட உணர்ச்சி அரசியலை அகற்றி, அறிவார்ந்த அரசியலை உருவாக்குவதற்கான அரசியல் செயல்திட்டங்களை உருவாக்கி மக்களை புதிய அரசியல் பண்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்வதாக இல்லை. மாற்று அரசியல் என்றால் என்ன என்பது கூட கிழக்கில் உள்ள பல அரசியல் தலைவர்களுக்குத் தெரியாது. பெருமளவானவர்களின் கருத்துப்படி யாழ் மேலாதிக்க அரசியலுக்கு மாற்றாக கிழக்கில், கிழக்கு மேலாதிக்கத்தைக் கொண்டு வருவதுதான் மாற்று அரசியல் என நினைக்கின்றனர். இதனையே மக்கள் மத்தியிலும் கொண்டு செல்கின்றனர்.

> **யாழ் மேலாதிக்கத்துக்கு எதிர் என்பது யாழ்ப்பாணத்துக்கு எதிரானதாக புரிந்து கொள்ளப்படுகின்றது.**

எது மாற்று என்று உணர்வதற்கும் அதனைத் தெரிந்து கொள்வதற்கும் முடியாத சமூகமாக தமிழ் சமூகம் இருப்பதுதான் இந்தச் சமூகத்தின் அரசியல் வங்குரோத்துத் தனமாகும். இதனை எவ்வாறு நீக்கி அறிவார்ந்த அரசியல் சமூகமாக கட்டியெழுப்புவது என்பதுதான் உண்மையாக மக்களை நேசிக்கும் கட்சிகளின் முக்கிய செயற்பாட்டுப் பணியாக இருத்தல் வேண்டும்.

அறிவார்ந்த தத்துவார்த்த தளமும் அந்தத் தளத்தினூடு அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்களும் இல்லாமல் உணர்ச்சி அரசியலாலும் உணர்ச்சி மயப்படுத்தப்பட்ட மக்களாலும் எந்தவொரு அரசியல் வெற்றியையும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாது என்பது தமிழர்களின் அரசியல் அனுபவம் கற்றுத் தரும் பாடமாகும். இந்தப் பாடத்திலிருந்து நாம் புதிய பாதைகளை வகுப்பவர்களாகவும் இல்லை. தொடர்ந்து மக்களை உணர்ச்சியேற்றம் செய்து மக்களை வீதிக்கு கொண்டு வருவதற்கும் அதனை மக்கள் போராட்டங்கள் என்று காண்பிப்பதிலும் காட்டும் அக்கறை உண்மையான மக்கள் போராட்டங்களை வடிவமைத்து அவற்றை தொடர்ச்சியான போராட்டங்களாக முன்னெடுப்பதற்கு எந்த அசியல் தலைவர்களுக்கும் முயற்சிப்பதாகவும் இல்லை. நிர்வாகப் பிரச்சினைகளை அரசியல் பிரச்சினைகளாக உருமாற்றம் செய்து அவற்றை தீர்க்க முடியாத சமூகப் பிரச்சினைகளாக ஆக்குவதிலும் சில அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. இவற்றின் மூலம் தங்களுக்குக் கிடைக்கும் வெகுசனப் பிரபல்யம் அடுத்த தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தரும் என்ற கணிப்புடன் மக்களை வீதிக்கு அணிதிரட்டுகின்றனர்.

இவ்வாறான அணிதிரட்டல்கள், உசுப்பேற்றல்களை விட்டு ஓர் ஒருங்கிணைந்த கூட்டு அரசியல் அணியாக செயற்பட்டு மாற்று அரசியலை உருவாக்க வருமாறு விடுக்கப்படும் அழைப்புக்களை மக்களை தேர்தல் வெற்றிக்காக அணிதிரட்டுவோர் கண்டு கொள்வதாக இல்லை. கிழக்கிலுள்ள முக்கிய தமிழ் அரசியல் கட்சி ஒன்று இவ்வாறான ஒற்றுமை பற்றிய கருத்தாடல்களைக் கண்டு குழப்பமடைகின்றது. எங்கே தமது தலைமைத்துவத்தினை ஒற்றுமை என்ற வேடத்துடன் யாழ் மேலாதிக்கம் வந்து காவுகொண்டு போய்விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு வலுவாக இருக்கின்றது. இதனால் ஒற்றுமையினை உதட்டளவில் பேசி ஒற்றுமையினைக் குழப்புவதில் குறியாக இருக்கின்றனர். யாழ் மேலாதிக்கச் சக்திகள் எவை? யாழ் முற்போக்குச் சக்திகள் எவை? என்று அடையாளம் கண்டுகொண்டு அவற்றுடன் தமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூட முடியாதளவிற்கு அவர்களுடைய அரசியல் ஞானம் உள்ளது அல்லது தனிநபர் நலன் உள்ளது.

மற்றொருபுறம் கிழக்கின் தேவைப்பாடுகள், கிழக்கின் தனித்துவங்கள், கிழக்கின் கருத்தியல்கள் கிழக்கிற்கான அரசியல் தலைமைத்துவம் பற்றிப் பேச முற்படுகின்றபோதே வடக்கிலிருந்து பிரதேசவாத முத்திரை குத்தப்படுவதும் அவர்கள் தமிழ்த் தேசியத்துக்கு விரோதிகளாக பார்க்கப்படுவதும் நடக்கின்றது. இது போலவே யாழ் மேலாதிக்கத்துக்கு எதிர் என்பதை யாழ்ப்பாணத்துக்கு எதிரானதாக புரிந்து கொள்ளப்படுகின்றது.

இவையெல்லாம் உணர்ச்சி அரசியல் எதையுமே எம்மை அறிவார்ந்து புரிந்து கொள்ள முடியாதளவிற்கு வைத்திருப்பதன் வெளிப்பாடுகளேயாகும். கிழக்கு மக்கள் ஓர் அரசியல் கூட்டணிக்கு தடையாக இருப்பவர்களையும் அவர்களின் அரசியல் கட்சிகளின் வங்குரோத்துத் தனங்களையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அது போல் தமக்கு வெளியில் சுமத்தப்படும் பிரதேசவாத முத்திரையினை அறிவார்ந்து கையாண்டு யாழ் முற்போக்குச் சக்திகளுடன் கைகோர்த்து தமிழர்களிடத்தில் புரையோடிப்போயிருக்கும் அதிகாரத்துவ வர்க்கத்தினரின் உணர்ச்சி அரசியலை உடைத்தெறிந்து அறிவார்ந்த அரசியலுக்கான பாதையினை வகுக்க உழைப்போருடன் கைகோர்க்க வேண்டும். கிழக்கு மக்களின் இந்தச் செயற்பாடு கிழக்குத் தமிழர்களின் அரசியலுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் நன்மையளிக்கும் முன்னுதாரணமான செயற்பாடாக அமையும். இந்த மகத்தான பணியைச் செய்வதற்கு கிழக்கு மக்கள் முன்வருவார்களா?

# ஜனாதிபதித் தேர்தல் - 2019: ஒரு தமிழனின் பார்வையில்

இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலைக்கழகம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஆகிய அங்கீகரிக்கப்பட்ட நான்கு அரசியல் கட்சிகளும் இன்னும் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பெறாத தமிழ் மக்கள் கூட்டணியும் ஆக மொத்தம் ஐந்து தமிழ்க்கட்சிகள் பதின்மூன்று அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஜனாதிபதி வேட்பாளருக்கே தங்கள் (தமிழ் மக்களின்) ஆதரவு என அறிவித்துள்ளன. தமிழர்தம் அரசியல் தலைமைகள் குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரைகாலமும் தமிழ்மக்களை ஏமாற்றி வந்ததன் உச்சக்கட்டமே இது.

எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்று இன்னும் தாங்கள் முடிவெடுக்கவில்லையென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் கூறி முழுப்பூசணிக்காயையும் சோற்றில் மறைத்துக்கொண்டிருக்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் கோத்தபாயாவை ஆதரிக்கும் தமிழ்க்கட்சிகளைத் திட்டித்தீர்த்துக் கொண்டு சஜித் பிறேமதாசாவை ஆதரித்துக் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். இன்னும் முடிவெடுக்கவில்லை என்று கூறிக்கொண்டிருப்பதும் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும் 'பொய்' தானே. ஏன் இந்த ஏமாற்று அரசியல்?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சஜித் பிறேமதாசாவை அல்லது ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிக்கிறது எனப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டியதுதானே. சரி பிழைக்கு அப்பால் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் மலையக அரசியல் கட்சிகளும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக்கட்சி தமிழர் சமூகஜனநாயகக்கட்சி மற்றும் அகில இலங்கை தமிழர் மகாசபை ஆகிய தமிழ் அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளன.

அதுதான் அரசியல் கண்ணியம் ஆகும். அந்த அரசியல் கண்ணியம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் கடுகளவும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் முழுக்க முழுக்க சந்தர்ப்பவாத அரசியலாகும்.

மேலும் இந்தப் பதின்மூன்று அம்சக்கோரிக்கை விவகாரத்தைத்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

தர்க்கரீதியாக நோக்குவோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முப்பத்தைந்து வேட்பாளர்களில் சிவாஜிலிங்கத்தைத் தவிர வேறெந்த வேட்பாளரும் இந்தக் கோரிக்கைகளை எழுத்துமூலமோ அல்லது வாய்மொழி மூலமோ ஏற்றுக்கொள்ளப்பேவதில்லை என்பது எவரும் இலேசாகப் புரிந்துகொள்ளக் கூடிய எளிய எண்கணிதம். அப்படியாயின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள ஐந்து கட்சிகளும் சிவாஜிலிங்கத்தை ஆதரிப்பதுதானே அரசியல் நேர்மை. அதனை இக்கட்சிகள் கூட்டாகச் செய்யுமா? அப்படிச் செய்யுமென ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் கட்சியின் முடிவை மீறி தன்னிச்சையாக முடிவெடுத்து வேட்பாளரான சிவாஜிலிங்கத்தின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ள ரெலோவின் தலைமைப்பீடம் அதில் இணைந்து கொள்ளுமா?

வெற்றிவாய்ப்பு உள்ளவர்கள் எனக்கருதப்படும் இரு பிரதான வேட்பாளர்களான கோத்தாபாய மற்றும் சஜித் ஆகியோரிடம் மட்டுமே இக்கோரிக்கையை முன்வைத்து இருவருமே அதனை ஏற்றக்கொள்ளவில்லையென்றால் அடுத்தகட்டத் தெரிவு என்ன? இரு பிரதான வேட்பானர்களும் இக்கோரிக்கையை நிராகரித்தபின்பு வாக்குவங்கி வரிசையில் மூன்றாம் இடத்தில் இருப்பதாகக் கருதப்படும் அனுரகுமாரதிசாநாயகக்கா அதனை ஏற்றுக்கொள்வாரா? அப்படி அவர் ஏற்றுக்கொள்வதாக ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும். வெற்றிவாய்ப்பு இல்லாத அவருக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்கள் என்ன நன்மைகளைப் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள்.

ஒருவேளை இக்கோரிக்கைகளை அனுரகுமார திசாநாயக்கா ஏற்றுக் கொண்டால் தமிழர்கள் அவரைத்தான் ஆதரிக்கவேண்டும் என்று இந்த ஐந்து கட்சிகளும் பகிரங்கமாகத் தமிழர்களைக் கேட்டுக் கொள்வார்களா? இவை எதுவுமே நடைபெறப்போவதில்லை என்பது அரசியல் அரிச்சுவடி அறிந்த மாணவனுக்குக் கூடத் தெரியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இறுதித் தருணத்தில்தான் தங்கள் பூனையை அவிழ்ப்பார்கள். ஆம் ! சஜித் பிறேமதாசாவை ஆதரிக்கச் சொல்லுவார்கள். அல்லது இவர்கள் சட்டமேதைகளும் அரசியல் சாணக்கியர்களுமல்லவா? சஜித் பிறேமதாசாவை ஆதரிக்கச் சொல்லி நேரடியாகச் செல்லாமல் 'அரியம் சிந்தனை'யில் உதித்த ' தமிழர் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை விட யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பதே முக்கியம்' என்ற 21ம் நூற்றாண்டின் அரிய அரசியல் கண்டுபிடிப்பின் அடிப்படையில் கோத்தாபாயாவுக்கு மட்டும் வாக்களிக்க வேண்டாம் எனவும் சொல்லக்கூடும்.

இரண்டிலும் தங்கள் 'சுயலாப'க் கட்சி அரசியலுக்கு ஆபத்து உண்டு எனக் கருதினால் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஸ்கரிக்கும்படி அல்லது மக்களை தாங்களே முடிவெடுக்கும்படி கேட்டுத் தந்திரமாகத் தப்பித்துக் கொள்ளவும் கூடும். இதில் எதனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்யப்போகிறதோ அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். தமிழ் மக்கள் ஏமாறத் தயாராக இருக்கும்வரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களை ஏமாற்றிக்கொண்டே இருக்கும். இதுதான் தமிழர்களின் கடந்த எழுபது வருடகால அரசியல் செல்நெறி. இதில் மாற்றம் ஏற்பட்டால் ஒழிய தமிழர்களுக்கு இறங்குதிசைதான்.

## மரம் நடுவோம்



(படுவான் பாலகன்)

'மரம்தனை வளர்ப்போம் பசுமைதனை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் 1000 பனைவிதைகள் அம்பிளாந்துறைக் கிராமத்தில் நடப்பட்டன.

அம்பிளாந்துறை கடல்கடந்த உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில், ஆற்றாங்கரை ஓரமாக 2கிலோ மீற்றர் தூரத்திற்கு இப்பனைவிதைகள் நடப்பட்டன.

இப்பனைவிதை நடு நிகழ்வில் கிராமசேவை உத்தியோகத்தர் சி.ஜீவிதன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளிப்பது என்று கிழக்கு தமிழர் கூட்டமைப்பு முடிவு

கிழக்கத் தமிழர் கூட்டமைப்பின் 'கூட்டுச் சனநாயகப் பணிக்குழு' வின் கூட்டம் 19.10.2019 சனிக்கிழமை களுதாவளையில் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் பணிக்குழுவின் பிரதம இணைப்பாளர் கலாநிதி சு.சிவரெத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு எடுக்கவேண்டிய அரசியல் நிலைபாடு குறித்து ஆழமாக ஆராயப்பட்டது. கிழக்கின் இன்றைய களநிலை, கிழக்குத் தமிழர்களின் எதிர்கால இருப்பு மற்றும் கிழக்குத் தமிழர்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார அரசியல் சவால்கள் என்பன குறித்து விரிவான கலந்துரையாடலின் முடிவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச அவர்களின் தலைமையிலான 'பொதுஜன பெரமுன' கட்சியில் களம் இறங்கியிருக்கும் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயராஜபக்ச அவர்களை ஆதரிப்பது என்ற தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயராஜபக்ச ஆகிய இருவரையும் நேரில் சந்தித்துக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான கோரிக்கைகளை அறிக்கை வடிவில் கையளிப்பதற்காக என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என்பது பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப் பெற்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயராஜபக்ச அவர்களை ஆதரிக்க வேண்டும் என்ற பணிக்குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அரசியல் கூட்டணியான கிழக்குத் தமிழர் கூட்டமைப்பிடம் பாரப்படுத்தவும் பட்டது.

## கிழக்கில் அதிகூடிய 94 சித்திகளுடன் கல்முனை பற்றிமா சாதனை.

(காரைதீவு குறூப்நிருபர் சகா)

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி கிழக்கில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை அதிகூடிய சித்திகளைப் பெற்றது. அப்பாடசாலையின் 94 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்று சாதனைபடைத்துள்ளனர்.

அப்பாடசாலை அதிபர் வண.சகோ. செபமாலை சந்தியாகோவிடம் இதுபற்றிக்கேட்டபோது; 'இம்முறை 244 மாணவர்கள் தோற்றினர். அவர்களில் 235பேர் 70புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர். அதாவது 96 வீதமான மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். வெட்டுப்புள்ளிக்கு மேல் 94பேர் சித்தியடைந்து சாதனைபடைத்துள்ளனர்.' என்றார்.

## 'நல்லிணக்க மேம்பாட்டுக்கு ஜனாதிபதி தேர்தல் ஒரு களம்'

இலங்கையில் மறுசீரமைப்பு மற்றும் தேசிய நல்லிணக்க மேம்பாட்டுக்கான பயணத்தில் ஜனாதிபதி தேர்தல் மிக முக்கியமான களமாகப் பயன்படுத்தப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக கண்காணிப்புக் குழு செயற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் அடங்கலாக பல்வேறு 5 சந்தர்ப்பங்களில் இவ்வாறு தமது குழுவினர் இலங்கை தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் ஜனநாயக செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கு வழங்கும் ஒத்துழைப்பாக இதனை அடையாளப்படுத்த முடியும் என்று ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் உப தலைவர் திருமதி பெற்றிக்கா மொகறினி தெரிவித்துள்ளார்.

தமது கண்காணிப்பு பணிகள் முழுமையான ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இடம்பெறும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் உறுதி செய்துள்ளது. 30 உறுப்பினர்களைக் கொண்ட நீண்டகால கண்காணிப்பு குழு ஒன்று ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தேர்தல் இறுதி வாரத்தில் மற்றுமொரு குறுகிய கால கண்காணிப்பிற்கான 30 பேரைக் கொண்ட குழு ஒன்று இதில் இணைந்து கொள்ளவுள்ளது.

நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்த பின்னர் முதல் கட்ட அறிக்கையும் இடைக்கால சிபாரிசுகள் மற்றும் முடிவுகளை உள்ளடக்கிய முழுமையான கண்காணிப்பு அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயாராகிவருகின்றது.

# ஜனாதிபதி தேர்தல்-யாரிந்த ஜேவிபியினர்? (தொடர் - 2)



கடந்த யூலை 18ஆம் திகதியன்று காலிமுக திடலில் இடம்பெற்ற மாபெரும் பேரணியூடாக ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளராக தோழர் அனுரா குமார திசாநாயக்க அறிமுகம் செய்யப்பட்டுள்ளார். இந்த தேர்வில் ஜேவிபி உட்பட பல்வேறு அரசியல் குழுக்கள், வெகுஜன அமைப்புகள், அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் கலைஞர்கள் போன்ற பல்வேறுபட்ட சிவில்சமூகத்தினரும் (CIVIL SOCIETYS) தேசிய சக்தியாக ஒன்றிணைந்துள்ளனர். அவர்கள் அனைவரதும் கருத்தொருமிப்பாக கல்வி, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், விவசாயம், போக்குவரத்து, கலை, கலாச்சாரம், தேசத்தைக் கட்டியெழுப்புதல், குடியுரிமைப் பொறுப்புகள், வெளியுறவுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, மோசடி மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகிய அனைத்து அம்சங்களையும் கொண்ட தேசிய கொள்கை ஒன்றை ஜேவிபியினர் மக்கள் முன் வைத்துள்ளனர்.



அடிப்படையில் இடதுசாரிய பாரம்பரியம் மிக்க ஜேவிபியினர் இனப்பிரச்சனை என்கின்ற விடயத்தை விட இத்தகைய சமூக பொருளாதார மேம்பாடு குறித்த கொள்கைகளை முன்வைப்பது இயல்பானதே.

ஆனால் முக்கிய தமிழ் கட்சிகளின் செயற்பாடுகளையும் எதிர்பார்ப்புகளையும் பொறுத்தவரையில் இந்த கொள்கை முன்மொழிவுகள் எதிர்மாறானவையாகும். இடது சாரிகள் போன்று சாமானிய மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சனைகளை அரசியலில் ஒருபோதும் தமிழரசு கட்சி போன்றவை முன்னிறுத்துவதில்லை. பாரம்பரியமாக வலதுசாரி மேட்டுக்குடிகளாக இருக்கின்ற கறுவாத்தோட்ட 'கனவான்களே' தமிழ் அரசியலை வழிநடத்துபவர்களாக இருப்பதே இதற்கு காரணமாகும். இனவாத அணிதிரட்டல் மட்டுமே அவர்களது நீண்டகால அரசியல் மூலதனமாக இருந்து வருகின்றது. எனவேதான் தமிழரசு கட்சியினர் ஒரு போதும் இடதுசாரி சிந்தனைகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சனை சார்ந்து வலதுசாரி பேரினவாத கட்சிகள் மாறி மாறி வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றியே வருகின்றன. இந்நிலை இம்முறையும் தொடருகின்றது. பேரினவாத கட்சிகளைப் பொறுத்தவரையில் இத்தேர்தலின் ஊடாக வடக்கு கிழக்கு இணைப்பு, சமஸ்டி தீர்வு, மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள், அரசியல் கைதிகள் விடுதலை என்கின்ற பதங்கள் தமிழ் மக்களிடையே மீண்டுமொருமுறை பேசுபொருளாக்கப்படுகின்றன. ஆனால் அவைகள் வெறும் வாக்குறுதிகள் மட்டுமேயாகும் என்பதைக் கடந்த காலங்கள் பலமுறை நிரூபித்துள்ளன.

ஜேவிபியோ இவை குறித்து எவ்வித வாக்குறுதிகளையும் வழங்க தயாரில்லாத நிலையில் காணப்படுகின்றது. சமூக பொருளாதார சமத்துவம் நோக்கி கட்டியெழுப்பப்படும் ஒரு நல்லாட்சி(good governance) ஊடாக இனப்பிரச்சனைக்கான தீர்வு என்கின்ற கோரிக்கையை தாண்டி செல்ல முடியும் எனும் கோட்பாடு அவர்களுடையது. இதனை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள்? வெற்று வாக்குறுதிகளை வழங்குவதை விட நடைமுறை சாத்தியமான விடயங்களை பேசுவது என்கின்ற அரசியல் நேர்மை ஜேவிபியினரிடம் இருப்பதை ஏன் நாம் அடையாளம் காணுவதில்லை? என்கின்ற கேள்விகள் முக்கியமானவையாகும்.

**அறுமக்குட்டி போடி**

ஒரு புறம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றி போலியாக பேசிக்கொண்டு மறுபுறம் 'இது சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய பூர்வீக நாடு' என்று இனவாதம் பேசும் சக்திகளுடன் கரம்கோர்த்துக்கொண்டு அரசியல் செய்வதே பேரினவாத கட்சிகளின் இரட்டை நிலைப்பாடாகும். இது குறித்து தமிழ் மற்றும் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகள் ஒரு போதும் கவலைகொள்வதில்லை. ஆனால் 'பூர்வீகம் பற்றி பேசுவது அர்த்தமற்றது இது எல்லா இனங்களுக்கும் உரிய நாடு' என்று சிங்களவர்கள் முன்னிலையிலும் அடித்து பேசுகின்ற தற்றுணிவு கொண்டவராக ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரா குமாரதிசாநாயக்க போன்றவர்கள் இன்று எழுந்து நிற்கின்றனர். இது உண்மையிலேயே சிறுபான்மை மக்களுக்கு எதிர்கால இலங்கை பற்றிய நம்பிக்கைதரும் முன்னுதாரணமாகும் என நாம் ஏன் கருத தயங்குகின்றோம்.

'வருவார் ஆனால் வரமாட்டார்' என்று திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கின்ற தலைவர்களுடனெல்லாம் ஓடியோடி முன்புறமாகவும் பின்புறமாகவும் பேசுகின்ற சிறுபான்மை கட்சிகளில் ஏதேனும் இதுவரையில் ஜேவிபியுடன் ஒரு புரிந்துணர்வுக்காவது பேசமுன்வந்ததாக தகவல்களில்லை.

கடந்த 70 ஆண்டு காலமாக இலங்கையை ஆண்டுவரும் ஆட்சியாளர்கள் ஊழல்களாலும் லஞ்சங்களினாலும் நாட்டை குட்டி சுவராக்கிவிட்டனர் என்பது நாடறிந்த உண்மையாகும். இந்நிலையில் ஊழலற்ற ஆட்சியொன்றை ஸ்தாபித்தல் என்பது ஜேவிபியினரின் முன்மொழிவுகளில் முக்கியமானதொன்றாகும். அதற்கான நன்னடத்தையையும் முன்னுதாரணத்தையும் அவர்கள் மகிந்த ஆட்சிக்காலத்தில் மந்திரிசபையில் பங்கெடுத்த வேளைகளில் நிரூபித்துமுள்ளனர். கோடிக்கணக்கில் சம்பாதிப்பதற்காகவே தீர்வையற்ற வாகன சலுகைகளுக்காக அலையும் தமிழ் எம்பிமார்களை விட மக்கள் பணத்தை வீணாக்க மாட்டோம் என்று அந்த சலுகைகளை பெற்றுக்கொள்ள மறுப்பதையே ஜேவிபி தனது கொள்கையாக கொண்டிருப்பதை நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கின்றோம். அரசியல் பதவிகளால் பெறப்படுகின்ற சம்பளங்களைக்கூட கட்சி நிதிக்கு வழங்கிவிட்டு கட்சி மீள வழங்குகின்ற மாதாந்த படியுடன்தான் அனைத்து ஜேவிபியினரும் வாழ்கின்றார்கள் என்பது எத்துணை சிறப்பான முன்மாதிரி? ஆனால் நிதி மோசடி வழக்கில் சிக்கித்தவிக்கின்ற முன்னாள் ஆட்சியாளர்களையும் ஆட்சிக்கு வந்து அடுத்த வாரமே மத்திய வங்கியை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் இருக்கும் இந்நாள் ஆட்சியாளர்களையும் தவிர்த்து ஊழலற்ற ஆட்சியொன்றை உருவாக்கும் பணியில் முன்னிற்கும் ஜேவிபியினர் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தருகின்றனர் என்பது பொய்யல்லவே.

சட்டத்துக்கு முரணாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கான வழக்கை தாக்கல் செய்தவர்கள் இந்த ஜேவிபியினரே என்கின்ற குற்றச்சாட்டுக்களை பரவலாக தமிழ் ஊடகங்கள் பரப்பி வருகின்றன. அதனூடாக அவர்களை இனவாதிகளெனவும் சித்தரிக்க அவைகள் தவறுவதில்லை. தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்த ஆட்சியாளர்கள் அனைவருடனும் தமிழ் கட்சிகள் மீண்டும் மீண்டும் பேச முடியுமென்றால் ஜேவிபியினர் மட்டும் எந்த அடிப்படையில் விதிவிலக்கானவர்கள்? தங்களது சிங்கள வாக்குகள் ஊடாக கிடைத்த தேசிய பட்டியல் எம்பி பதவியைக்கூட தமிழரான தோழர் சந்திரசேகரத்துக்கு இரு முறை வழங்கியது இந்த ஜேவிபிதான் என்பதை எந்த பத்திரிகையும் சிலாகித்து எழுதுவதில்லை. அதுமட்டுமன்றி சிறுபான்மை முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் நோக்கில் அஞ்சான் உம்மா என்கின்ற ஒரு பெண்ணுக்கும் அந்த தேசிய பட்டியல் எம்பி பதவியை ஒரு முறை வழங்கி கௌரவித்தது இந்த ஜேவிபி என்பதை நாம் இலகுவாக மறந்துவிட செய்கின்றன தமிழ் ஊடகங்கள்.

எப்படியிருந்தபோதிலும் ஊழலுக்கு எதிரானவர்கள் என்கின்ற நம்பிக்கையை சிறுபான்மையினரிடத்திலும் ஜேவிபியினர் பெற்றிருக்கின்றனர். எனினும் நாட்டில் புரையோடிப் போயிருக்கும் பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்துக்கு எதிராக அவர்கள் பயணிக்க இன்னும் நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளது என்பதே உண்மையாகும். 'இலங்கையராய் நாமிருப்போம் எம்மிடையே வேறுபாடுகள் இல்லை' என்பதை மகிந்தவும் ரணிலும் கூடத்தான் சொல்கின்றனர்.



ஆனால் அவர்களால் மட்டுமல்ல ஜேவிபியினாலும் கூட இலங்கையின் பெரும்பான்மையினராக வாழும் பௌத்த சிங்களவர்களுக்கு அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையில் கைவைக்க முடியாது என்பது உறுதி. ஒரு பல்லின மக்களின் தேசமே இலங்கை என்கின்ற நம்பிக்கையை சிறுபான்மையினரிடத்தில் ஏற்படுத்துவதாக இருந்தால் ஒரு யாப்பு மாற்றத்தினுடாகவே அது சாத்தியமாகும். அதில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுகின்றதா? அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படுகின்றதா? என்பதை விட இலங்கையானது மதச்சார்பற்ற ஒருநாடு (nation of Secularism) என பிரகடனம் செய்யப்படுகின்றதா என்பதே முக்கியமானதாகும். இது போன்ற விடயங்களை நோக்கிய உரையாடல்களை வளர்த்துக் கொள்வதற்காகவேனும் சிறுபான்மை இனங்களினை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மற்றும் இடதுசாரிய முற்போக்கு சக்திகள் ஜேவிபியினருடன் உறவுகொள்ளத் தயாராகவேண்டும். அதற்கு தொடக்கமான தருணமாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை ஏன் பயன்படுத்தக்கூடாது?

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## மட்டக்களப்பு மாவட்டத்தினை இணைத்த இராம நாடகம்



25 வருடங்களுக்கு பிற்பாடு நமது ஊரில் அரங்கேற்றப்பட்ட கூத்தினைப் பார்த்ததில் அளவற்ற மகிழ்ச்சி என்கிறார் சீனித்தம்பி. படுவானில்தான் தமிழர்களின் அடையாளங்கள், பண்பாடுகள் பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. பாரம்பரிய கலைகளுக்கு முன்னுரிமையளித்து அதனை இளம் சந்ததியினருக்கு வழங்குகின்ற செயற்பாட்டினை முன்னெடுப்பவர்களும் இவர்கள்தான். நேரமின்றி, சமுக அக்கறையின்றி செயற்படும் பலர் மத்தியில், கலைக்காக தம்மை அர்பணித்து, வீட்டுப்பொறுப்புக்களையும் தாண்டி, நேரம் ஒதுக்கி அதனை வளர்த்தெடுக்கின்ற, வரலாற்றைப் பேணுகின்ற கலைஞர்களையும், கலையார்வலர்களையும், செயற்பாட்டாளர்களையும் மறந்துவிடவும் முடியாது, பாராட்டாமல் இருந்துவிடவும் இயலாது.

பரந்துவிரிந்திருக்கும் படுவான் மண்ணில் ஆண்டுதோறும் கூத்துக்கள், கரகங்கள், வசந்தந் கூத்துக்கள் என பலகலையும் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை சிறப்புக்குரியது. ஆலய உற்சவங்கள் தோறும் அவை ஆற்றுகை செய்யப்படுவதும் காணக்கூடியதே.

அண்மையில் நடைபெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது, கூத்துக்கலையைத் தவிர வேறு எந்தக் கலைகளும் வெளிவீதியை அலங்கரிக்கவில்லை. கூத்துக்களே ஆற்றுகை செய்யப்பட்டமை மிகவும் சிறப்புக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். ஆனாலும் இங்கு வேதனைப்பட வேண்டிய விடயமும் இருக்கத்தான் செய்கின்றது. இசைநிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்ற போது ஒன்றுசேருகின்ற இளைஞர், யுவதிகள் கூத்துக்கலையைப் பார்ப்பதற்கு ஒன்றுசேராமையே வேதனையளிக்கின்றது. ஆனாலும் இசைநிகழ்ச்சிகளின் போது இடப்படும் கூச்சல்களும், கும்மாளங்களும், ஏச்சுக்களும், பேச்சுக்களும், சண்டைகளும், சச்சரவுகளும் கூத்துக்கலையை பார்ப்பவர்களிடத்தில் இல்லை. குந்தியிருந்து விழிவெட்டாது, முடியும் வரை அமைதியாகவிருந்து, உணர்வுடன் பார்த்துச் செல்லும் கலைஞர்கள் இதற்காக ஒன்றுசேருகின்றமை சந்தோசமே. என அம்பிளாந்துறை சந்தியில் நின்று சீனித்தம்பி கதிர்காமதம்பியிடம் கூறிக்கொண்டிருந்தான்.

இவ்வேளையில்தான், அம்பிளாந்துறையில் அரங்கேற்றப்பட்ட கூத்தினைப் பற்றி தனது மனதில்பட்டதை கூற ஆரம்பித்தான் கதிர்காத்தம்பி. 'அம்பிளாந்துறை கிராமத்தில் பல்வேறு கலைச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் கடந்த 25வருடங்களாக கூத்து ஆடி அரங்கேற்றப்படவில்லை. இந்நிலையில்தான் இதே கிராமத்தில் பிறந்து, தற்போது கிழக்கு பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையின் தலைவராக இருக்கின்ற சு.சந்திரகுமார் கூத்தொன்றினை ஆற்றுகை செய்வதற்காக முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

நீண்ட இடைவெளியை தகர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் தனது கிராமத்தில் கூத்தினை ஆற்றுகை செய்ய வேண்டும் என எண்ணினாரோ தெரியவில்லை. ஆனால் அவ்வாறான இடைவெளியை தகர்த்தெறிந்தமை பாராட்டுக்குரியதே. இராமாயணக்கதையினைக் கொண்டு எழுதப்பட்ட 'இராமநாடகம்' எனும் வடமோடிக்கூத்தினையே ஆற்றுகை செய்துள்ளனர். இம்முயற்சியை கடந்த வருடமே இவர்கள், ஆரம்பித்திருந்தாலும், அதே ஆண்டு இக்கூத்தினை அரங்கேற்ற முடியாமல் போயிருக்கின்றது. ஆனாலும் முயற்சியை தளரவிடவில்லை.

இந்தவருடம் இக்கூத்தினை அரங்கேற்றியே ஆக வேண்டும் என்ற முயற்சியின் பலனாக, குறுகிய காலப்பகுதிக்குள் அவற்றினை ஆடி, அம்பிளாந்துறை கிராமத்தின் வேளாண்மை வயலொன்றில், இயற்சூழலோடு இணைந்த வகையில் களரியினை அமைத்து அரங்கேற்றியுள்ளனர். கூத்து ஆடுவதென்பது ஒருவிடயமாகவிருந்தாலும், கூத்தினை ஆடுவதற்கான கலைஞர்களை தெரிவுசெய்வது, அவர்களை இணைப்பது, எல்லோருக்கும் உரிய நேரத்தினை ஒழுங்குபடுத்தியெடுப்பது, அவர்களை முகாமை செய்வது என பல விடயங்களில் பாரிய சவால்களை எதிர்கொள்ள நேரிடும். ஒரே ஊரினைச்சேர்ந்தவர்களை இணைப்பதென்பது மிகக்கஸ்டமான சூழலாகவிருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கலைகளை இணைத்து இராமநாடக கூத்தினை அரங்கேற்றியிருக்கின்றமை மிகமிக பாராட்டுக்குரியதே. மண்முனை தென்மேற்கு பிரதேசம், மண்முனை மேற்கு பிரதேசம், மட்டக்களப்பு, சீலாமுனை, வந்தாறுமூலை என பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த கலைஞர்கள் இக்கூத்தில் பாத்திரமேற்றிருந்தனர். இச்செயற்பாடு மாவட்டத்தின் பதிவும் கூட.

எங்கோ, பரந்து விரிந்து நின்றவர்களை ஒரே நேரத்தில் இணைத்து கூத்தினை பழகி அரங்கேற்றியமையென்பது இலகுவானகாரியமுமல்ல. இதற்கு இணைப்பாக்கமாக செயற்பட்டவர்களின் சிறந்த திட்டமிடலும் இதில்

**படுவான் பாலகன்**

பிரதிபலித்திருக்கின்றதென்பதும் இங்கு புலப்பட்டு நிற்கின்றது. கலைஞர்களை தெரிவு செய்த விதம்தான் இவ்வெற்றிக்கு காரணமும் எனக்கூட சிந்திக்ககூடும். குறிப்பாக இதில் ஈடுபட்ட கலைஞர்கள் கலை மீது அதீத பற்றுக்கொண்டவர்கள் என எண்ண முடியும். கலைப்பற்று இல்லாதுபோயிருந்தால் நீண்ட தூர இடைவெளியில் இருந்தவர்களை ஒன்று சேர்த்திருக்க முடியாமல் போயிருக்கும்.



ஒரு துறையில் ஆர்வமுள்ளவர்கள் அத்துறைசார்ந்து எங்கு என்ன நடந்தாலும் அங்கு நிற்பார்கள் இதைத்தான் இவ்விணைப்பும் ஏற்படுத்தி நிற்கலாம் எனவும் கருதமுடியும்.

பல பாத்திரங்களை கொண்ட இக்கூத்தில் 18 பேர் ஆடியிருக்கின்றனர். இக்கூத்திலே, பெண்பாத்திரம் ஏற்று நடித்த இருவரைத் தவிர ஏனையோர்கள் அனைவரும் இளைஞர்களே பாத்திரமே நடித்திருந்தமை இன்னமும் சிறப்புக்குரியது என்கிறார் கதிரமத்தம்பி. இக்கலைஞர்களில் எல்லோரும் இதற்கு முதல் கூத்துக்களில் ஆடியவர்கள் அல்ல. இதற்கு முதல் கூத்து ஆடிய கலைஞர்களையும், இதுவரை கூத்து ஆடாத கலைஞர்களையும் இணைத்து ஆடியதென்பதும் பாராட்டப்பட வேண்டியது. கலைகளை வளர்க்க கலைஞர்களை காகித துண்டுகளை வைத்து மதிப்பிட்டு கௌரவங்களையும், விருதுகளையும் வழங்கும் சூழலில் உண்மையான செயற்பாட்டு கலைஞர்கள் எங்கு இருக்கின்றனர் எனத்தேடி அவர்களுக்கு கௌரவங்களையும், விருதுகளையும் வழங்குகின்ற போது, அவர்கள் உண்மையில் மகிழ்ச்சி கொள்வர். பல கலைஞர்கள் பல செயற்பாடுகள் செய்துவிட்டு காகித துண்டுகள் இல்லாது இருக்கின்றனர். அவ்வாறானவர்களை



கௌரவிப்பும் வழங்கும் திணைக்களங்களோ, அமைப்புகளோ கண்டுகொள்வதில்லை என்ற பார்வைகளும் இருக்கதான் செய்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் திணைக்களங்கள், சில அமைப்புக்களின் மத்தியில் கிராமங்களில் உள்ள கலையார்வலர்களையும், கலைஞர்களையும்; கொண்டு தேடி, மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள வளர்ந்துவரும் இளம்கலைஞர்களையும், வளர்ந்து பெயர்பெற்று நிற்கின்ற அண்ணாவிமார்களையும் இக்கூத்துக்களரியில் கௌரவித்திருந்தமையும் சிறப்புதான்.

நிறைந்த கலை ரசிகர்களின் முன்னிலையிலும், அரசாங்க அதிபர் உள்ளிட்ட பல மட்ட அரச உத்தியோகத்தர்களையும், சமயத்தலைவர்களையும், அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், கலைஞர்களையும், கலையார்வலர்களையும் இந்நிகழ்வுக்கு அழைப்புவிடுத்திருந்தமையுடன், பலர் இதில் பங்கேற்றிருந்தனர். இவ்வாறு பல்வேறு சிறப்பம்சங்களுடன் நடைபெற்ற கூத்தினை பல்கலைக்கழகத்தில் உள்ள விரிவுரையாளர்கள் முன்னின்று சமுகமட்டத்தில் நடத்தியிருக்கின்றமைதான் இன்னமும் சிறப்புதரு விடயமாகவுள்ளது.

எதிர்காலத்தில் மாணவர்களின் பாடத்திட்டத்தில் உண்மையான தொன்றுதொட்டு ஆற்றுகை செய்யப்பட்ட கூத்துக்களை மாணவர்கள் ஆடுவதற்கும், பழகுவதற்குமான சூழலை ஏற்படுத்த வேண்டும் இதற்கு பல்கலைகழக மட்டத்தினரின் சேவையும் தேவை. எனக்கூறியவனாக கதிரமத்தம்பியும் அவ்விடம் விட்டு அகன்றான்.



# பட்ஸ் அமைப்பின் நிதியுதவியில் படித்த மாணவர்கள் சித்தி



மட்டக்களப்பின் அபிவிருத்திக்காக பிரிட்டனில் செயற்படும் அமைப்பான பட்ஸ் அமைப்பின் நிதியுதவியில் பெரியநீலாவணை சுனாமி தொடர்மாடிக் குடியிருப்பில் நடத்தப்பட்ட இலவச வகுப்புகளில் பயிற்சி பெற்ற மாணவ மாணவிகள் 6 பேர் இந்த ஆண்டுக்கான 5 ஆம் வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

BUD'S UK நிதியுதவியில் பெரிய நீலாவணை தொடர் மாடியில் 2018 ஐப்பசி 10 ஆம் திகதி ஆரம்பகல்வி மாணவர்களுக்கான மாலை நேர இலவச வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிரகாரம் 2019 தரம் 5 புலமைப் பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். மொத்தமாக 21 மாணவர்கள் பரீட்சை எழுதியுள்ளார்கள். இதில் 14 மாணவர்கள் 100 தொடக்கம் 166 வரையான புள்ளிகளையும் 6 மாணவர்கள் 70 தொடக்கம் 100 வரையான புள்ளிகளையும் 1 மாணவன் 56 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

இந்தத் திட்டம் தொடர்பாக பட்ஸ் அமைப்புக்கு அரங்கம் நிறுவனம் பரிந்துரைத்திருந்தது என்பது தொடர்பில் நாமும் இதனால் பெருமையடைகிறோம்.

# கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தால் மின்னிணைப்புக்கு கொடுப்பனவு



கோட்டைமுனை விளையாட்டு கிராமம் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுவரும் சர்வதேச கிரிக்கட் மைதானத்துக்கு அருகில் வசிக்கும் 15 குடும்பங்களுக்கு கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தினால் மின்னிணைப்பை பெற்றுக்கொடுப்பதற்குரிய கொடுப்பனவு வழங்கப்பட்டது.



# விளையாட்டு

## புலம்பெயர்ந்தோர் உதவியில் பாடசாலை கிரிக்கெட் சங்கம் மேற்கு கல்வி வலயத்தில் உதயம்



-- ஜெயா --

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நிதியீட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் பாடசாலைகளுக்கான கிரிக்கெட் சங்கம் உருவாக்கப்பட்டது.

மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவரான பேரின்பராஜா சடாற்சரராஜா மற்றும் கிழக்கு பல்கலைகழகத்தின் விரிவுரையாளரான சாதாசிவம் சசிதரன் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் பாடசாலை கிரிக்கெட் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் அவர்கள் செயற்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு 25.09.2019 அன்று கன்னங்குடா மகாவித்தியாலய மண்டபத்தில் சிவானந்தம் சிறிதரன தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவரும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஆலோசகருமான பேரின்பராஜா சடாற்சரராஜா மற்றும் கிழக்கு பல்கலைகழகத்தின் விரிவுரையாளரும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஆலோசகருமான சாதாசிவம் சசிதரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் அவர்கள் ‘இச்சங்கத்தை ஆரம்பிக்க முதலில் பிள்ளையார் சுழி இட்டது கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவரான பேரின்பராஜா சடாற்சரராஜாதான் இவருக்கு தான் வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் பட்டவராக உள்ளதாக தெரிவித்தார். இதனை தொடர்ந்து கிழக்கு பல்கலைகழகத்தின் விரிவுரையாளர் சதாசிவம் சசிதரன் எம்முடன் இச்சங்கத்தில் இணைந்து கொண்டது தமக்கு இன்னும் இரட்டிப்பு மகிழ்ச்சி தருவதாக கூறியதுடன் உதைபந்தாட்டத்தில் எம் வலயம் மேலோங்கி செல்வதைப்போன்று கிரிக்கெட் விளையாட்டிலும் நாம் முன்னேற வேண்டும் இதற்காக மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் புலம் பெயர்ந்து வாழும் அங்கத்தவர்கள் உதவுவது தமக்கு மகிழ்ச்சி அளிப்பாக குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைகழகத்தின் விரிவுரையாளரும்



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஆலோசகருமான சாதாசிவம் சசிதரன் உரையாற்றுகையில் மட்டக்களப்பின் அன்றைய கல்வி இன்றைய கல்வி என மிக நிதானமாக உரையை தொடர்ந்து இவ்வமைப்பு மட்டக்களப்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டு தற்போது மரணிக்கும் தறுவாயில் உள்ளதாகவும் அதே போல் இங்கு அல்லாமல் சிறப்பாக செயற்பட வேண்டும் அதற்கு தங்களின் தலைவர் துடிப்பாக செயற்படுவார் என குறிப்பிட்டார். இச்சங்கத்திற்கான நிதியீட்டத்தை மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் புலம்பெயர்ந்து வாழும் உறுப்பினர்களான புவனசிங்கம் வசீகரன், இராமநாதன் உதயராஜன், பேரின்பராசா ரமேஸ்குமார் ஆகியோர் வழங்கியுள்ளதாகவும் முதல் கட்டமாக இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்ததுடன் இவ்வுதவியை உயர்த்திக் கொள்வதாயின் நீங்கள் இப்பாடசாலை கிரிக்கெட் சங்கத்தை உயிர்ப்புள்ள ஒரு சங்கமாக வழிநடாத்தினால் மாத்திரமே செயற்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் போது மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் ஊடாக 1000 பாடசாலை கல்வி புத்தகங்கள் மட்டக்களப்பு பிராந்திய தலைவர் தர்சனால் வழங்கி வைக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கான பாடசாலை கிரிக்கெட் சங்கத்திற்கான காசோலையும் கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவரான பேரின்பராஜா சடாற்சரராஜா அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## பன்சேனை பாரி வெற்றி



மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கான அமைப்பும் இணைந்து நடத்திய பாடசாலை மாணவிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பன்சேனை பாரிவித்தியாலய அணி மாணவிகள் சாம்பியனாக வெற்றி பெற்றனர்.

நான்கு அணிகளை உள்ளடக்கிய மாபெரும் மகளிருக்கான இந்தக் காற்பந்தாட்ட போட்டி கடந்த 17.10.2019 ம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இதில் மட்/மமே/பன்சேனை பாரி வித்தியாலய அணியினர் champion ஆக வெற்றிவாகை சூடினர். போட்டியின் ஆட்ட நாயகியாக பன்சேனையைச் சேர்ந்த மாணவி பா.வசந்தினி அவர்களும் சிறந்த பின்கள வீரராக அதே வித்தியாலய மாணவி கு.பேவிதா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப் போட்டியில் பன்சேனை தன்னாமுனை அணியை 4 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முதலாம் இடம்-மட்/பன்சேனை பாரி வித்.,
இரண்டாம் இடம்-மட்/தன்னாமுனை வித்.,,
மூன்றாம் இடம்-மட்/அம்பிளாந்துறை க.ம.வி,
நான்காம் இடம்-மட்/முனைக்காடு விவே.வித்.

பன்சேனை அணிக்கான அனுசரணையை செய்யும் அரங்கம் நிறுவனம் இதனால் பெருமையடைகின்றது.

## மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் சிவானந்தா அணி சம்பியனானது



யாசீர் அரபாத்

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 50 ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு சிவானந்தா அணியினர் வெற்றி பெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். ஏ பிரிவுக் கழகங்களுக்காக கடந்த 5 மாதகாலமாக இடம்பெற்று வந்த இச் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டிக்கு மட்டக்களப்பு சிவானந்தா அணியினரும் ஏறாவூர் இளந்தாரகை அணியினரும் தெரிவுசெய்யப்பட்டிருந்ததோடு இறுதிப் போட்டியானது கடந்த 22.09.2019 அன்று மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஏறாவூர் இளம் தாரகை அணியினர் 50 ஓவர் முடிவில் 173 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிவானந்தா அணியினர் 6 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கட்டுக்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கினர்.

இச் சுற்றுத்தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஏறாவூர் இளம் தாரகை அணியின் வீரர் S.I.M. சம்ஹான் அவர்களும் சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் சிறப்பாட்டக்காரராகவும் K.சாத்வீகன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோல்டன் ஈக்கிள் வெற்றி



எவகிறீன் விளையாட்டு கழகம் நடாத்திய அமரர் சேகர் பிரதீப் சவால்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கோல்டன் ஈக்கிள் விளையாட்டு கழகம் வெற்றி பெற்று வெற்றிகிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

வருடந்தோறும் நடைபெறும் இச்சுற்றுப்போட்டிக்கு 50 கழகங்கள் பதிவு செய்து போட்டியில் பங்கு பற்றின. இரண்டாமிடத்தை சென்.அன்ரனிஸ் விளையாட்டு கழகமும் மூன்றாமிடத்தை எவகிறீன் விளையாட்டு கழகமும் பெற்றுக் கொண்டன. போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர் சிறந்த பந்துவீச்சாளர் சிறப்பாட்டகாரருக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன



# பட்டறிவு

# ஜே.வி.பி.யும் பிக்கு அரசியலும்

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில் பிக்குமாரின் வகிபாகம், வளர்ச்சி, நீட்சி, வீழ்ச்சி எத்தகையது என்பது பற்றி விரிவாக ஆராயப்படவேண்டும். இடதுசாரித்துவத்திலிருந்து அவர்கள் பேரினவாத தலைமைகளாக பரிமாற்றமடைந்ததை தனியாக ஆராய்வதைத் தூண்டும் ஒரு கட்டுரையாக இதனை எடுத்துக்கொள்ளலாம்.

1940கள், 1950களில் பௌத்த தேசியவாதத்தின் முக்கிய கருத்துருவாக்கவாதியாக திகழ்ந்தவர் “வல்பொல ராஹுல தேரர்”. வித்தியாலங்கார பிரிவென்னின் உபவேந்தராக அவர் இருந்தார். பின்னர் அதுவே களனி பல்கலைக்கழகமாக மாறியபோது அதன் உபவேந்தராக இருந்தார். இலங்கையின் பௌத்த வரலாற்றில் மிகவும் விவாதப்பொருளாக ஆகிய நூலான 1946 இல் வெளியான “பிக்குமாரின் பாரம்பரியம்” (பிட்சுவகே உறுமய) என்கிற நூலை எழுதியவர் அவர். அதுமட்டுமன்றி ஏராளமான பிரபல சிங்கள வரலாற்று நூல்களை எழுதியவர். தீவிர பிக்குமாரை அவர் “அரசியல் பிக்குகள்” என்று அழைத்தார்.

“பிக்குமாரின் பாரம்பரிம்” என்கிற அவரின் நூல் பலவிவாதங்களைத் தோற்றுவித்ததோடு இன்றளவிலும் முக்கியமான நூலாகக் கருதப்படுகிறது. பிக்குமாரின் பாரம்பரியக் கடமை அரசியல் செய்வதல்ல, அதை விட அவர்களுக்கு சமூகப் பொறுப்பு என்றும், சமூகவேலைகள் அதைவிட முக்கியம் என்றும் வலியுறுத்தினார்.

இலங்கையின் வரலாற்றில் பலமான மாணவர் அமைப்பை பல்கலைகழகங்களில் வார்த்தெடுத்து அதனை அரசியல் சமூக செயற்பாடுகளோடு இணைத்தெடுத்தது ஜே.வி.பி தான். ஜே.வி.பியில் ஆரம்பத்திலிருந்து இன்று வரை பிக்குமார் ஜே.வி.பி.க்குள் நுழைவதற்கான நுழைவாயிலாக இந்த மாணவர் இயக்கம் தான் இருந்தது. சகல பல்கலைகழகஅங்களிலும் இருந்த அவர்களின் மாணவர் அமைப்புகளை ஒரு குடையின் கீழ் இணைக்கும் வகையின் அதன் பெயர் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்றே பெயரிட்டிருக்கிறார்கள். ஜே.வி. பியின் அமைப்புமுறையானது பல முன்னணி அமைப்புகளை கட்டி அதன் கீழ் ஒன்றிணைத்திருக்கிறது. மாணவர், விவசாயிகள், வைத்தியர்கள், பெண்கள், பல்வேறு தொழிற்சங்கங்கள் என பல சமூக சக்திகளையும் தனித்தனியாக இயக்கக் கூடியவகையிலும் தேவையானவேளை அனைத்தையும் ஒரே போராட்டத்தில் இணைக்கக் கூடிய வகையிலும் தான் அவர்களின் அமைத்துறை வியூகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மார்க்சிய புரட்சிகர இயக்கம் மதத்தையும், மத நிறுவனங்களையும், மதத் தலைவர்களையும் எப்படி கையாண்டிருக்கவேண்டும் என்பதற்கு புரட்சிகர வழிமுறைகள் உண்டு. பொருள்முதல்வாத தத்துவத்தை ஏற்றுக்கொள்பவர்கள் மதங்களைக் கையாளும் நாத்திக வழிமுறையே மாக்சிய வழிமுறையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இலங்கையின் அரசியலிலும், பெரிய அரசியல் கட்சிகளிலும் பௌத்தம் தவிர்க்கமுடியாததாக ஆக்கப்பட்டிருக்கிறது. இடதுசாரிக் கட்சிகளும் அதற்கு விதிவிலக்கல்ல. 1935இல் முதலாவது இடதுசாரிக் கட்சி லங்கா சமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும் அதுதான். அக்கட்சியின் மூலம் தான் பிக்குமாரும் கட்சி அரசியல் செயற்பாடுகளில் நேரடியாக இறங்கினர் என்று கூறலாம்.

## ஸ்ரீ சரணங்கர தேரர்



லங்கா சமசாமஜக் கட்சியில் பிரதான செயற்பாடுகளில் உடுகெந்தவல சரணங்கர தேரர் முக்கிய பாத்திரத்தை ஆற்றினார். 1932ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்துவதற்காக மேற்கு வங்காளம் சென்று செயற்பட்ட போது பிரிட்டிஷ் அரசு அவரை 1932 இல் கைது செய்து சிறையில் அடைத்தது. சிறையில் நோயுற்றிருந்தபோது அவரை ஜவஹர்லால் நேரு சிறையில் சென்று பார்வையிட்டு ஒரு அறிக்கையை அரசிடம் கையளித்ததன் விளைவாக் அவர் 1936இல் விடுதலையானார். அவர் இலங்கை வந்து ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடுவதற்காக லங்கா சமசமாஜக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டு செயற்பட்டார். 1937 ஆம் ஆண்டு அவர் எழுதிய “இலங்கைக்கு சோசலிசம் ஏன் அவசியம்?” என்கிற நூல் பரபரப்பை ஏற்படுத்திய நூல். அந்த நூலுக்கு எதிராக அன்றைய சிங்கள-பௌத்த தேசியவாத பத்திரிகையான “சிங்கள பௌத்தயா” பத்திரிகையில் பியதாச சிறிசேன தொடர் கட்டுரைகளை எழுதினார்.

1939ஆம் ஆண்டு சமசமாஜ கட்சி பிளவடைந்தபோது அதிலிருந்து வெளியேறியவர்களில் ஸ்ரீ சரணங்கர தேரரும் ஒருவர். பிரிந்தவர்கள் 3.07.1943 அன்று “கொம்யூனிஸ்ட் கட்சி”யை உருவாக்கியபோது, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது தலைவராக தெரிவாவனவர் ஸ்ரீ சரணங்கர தேரர். இந்த இடைக்காலத்துக்குள் ஏகாதிபத்திய எதிர்ப்பின் காரணமாக அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

வியட்நாம் யுத்தக் காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அவர் இலங்கையில் “வியட்நாம் சகோரத்துவ இயக்கம்” என்கிற அமைப்பைத் தொடங்கினார். 1957இல் அவருக்கு ரஷ்யாவில் லெனின் சமாதான விருது வழங்கப்பட்டது.

இவரின் காலத்தில் தான் பிக்குமார் அரசியல் பணிகளுக்குள் இழுக்கப்பட்டார்கள். 1950கள் பண்டாரநாயக்க சகாப்தத்தில் (தசாப்தத்தில்) நேரடியாக சிங்கள பௌத்த தேசியவாதிகளாக பிக்குமார் பலர் கட்சி அரசியலுக்குள் அதிகளவு களத்தில் இறங்கினார்கள்.

**என்.சரவணன்**

## ஜே.வி.பி.யின் நுழைவு

அதன் பின்னர் வந்த அடுத்த சில தசாப்தங்களுக்குக் கூட மதத்தை அதிகளவு இடதுசாரிக்கட்சிகள் இழுத்துப் போட்டுக்கொண்டதில்லை. ஆனால் 1956க்குப் பின்னர் இடதுசாரிகளாக இருந்த முக்கிய தலைவர்கள் சிலர் சிங்கள பௌத்த தேசியவாத நிகழ்ச்சிரலுக்குள் உள்ளிழுக்கப்பட்டார்கள்.

ஜே.வி.பியின் ஆரம்பமும் கூட சிங்கள பௌத்த தேசியவாத எச்சசொச்சனங்களுடன் தான் தொடங்கப்பட்டது என்பதற்கு ஏராளமான கதைகளைக் கூறமுடியும். தோழர் சண்முகதாசன் அது குறித்த பதிவுகளைக் கூட செய்துமிருக்கிறார்.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது நூற்றுக்கணக்கான பிக்குமார் அதில் பங்கெடுத்திருந்தார்கள். அக்கிளர்ச்சியின் போது அரச படைகளால் கொல்லப்பட்ட பிக்குமாரின் எண்ணிக்கை 50க்கு கிட்டியது. நூற்றுக்கணக்கான பிக்குமார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

1987-1989 காலகட்ட இரண்டாவது கிளர்ச்சி காலத்தில் ஜே.வி.பி.யில் ஏராளமான பௌத்த பிக்குமார் தலைமறைவுப் பணிகளில் ஈடுபட்டார்கள். 1987இல் நேரடியாக ஜே.வி.பியின் இரகசிய செயற்பாடுகளில் 525 பேர் இருக்கும் என்கிறார் ஜே.வி. பியைப் பற்றிய வரலாற்று ஆய்வு நூலை எழுதிய “தர்மன் விக்கிரமரத்ன”. கட்சிக்கு வெளியில் பல நூற்றுக்கணக்கான பிக்குமார் ஆதரவாளர்களாக இருந்தார்கள். ஜே.வி.பி தடை செய்யப்படுவதற்கு முன்னர் இறுதியாக 1983ஆம் ஆண்டு ஜே.வி.பியின் மே தின ஊர்வலத்தில் போது சோசலிச பிக்குகள் சங்கத்தைச் சேர்ந்த 550 பிக்குமார் கலந்து கொண்டிருந்தனர்.

ஜே.வி.பி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் ஜே.வி.பியின் பல பகிரங்க செயற்பாடுகளை முன்னெடுக்க இப்படி அமைக்கப்பட்ட “மனிதாபிமான பிக்குகள் சங்கம்”, “அனைத்து பல்கலைக்கழக பிக்கு ஒன்றியம்” போன்ற முன்னணி அமைப்புகளின் மூலம் தான் மேற்கொள்ளப்பட்டன.

பிக்குமாரை ஒருங்கிணைத்தலில் முக்கிய பங்காற்றியவர் டீ.எம்.ஆனந்த. மேலும் விஜேவீர, கமநாயக்க ஆகியோருக்கு அடுத்ததாக மூன்றாவது தலைவர் என்று கூறக்கூடியவராக இருந்தார் அவர். அவர் ஒரு பிக்குவாக இருந்தவர். அவரே ஜே.வி.பி.க்குள் ஏராளமான பிக்குமாரை இணைக்கக் காரணமாக இருந்தவர்.

1986ஆம் ஆண்டு தாய் “நாட்டைப் பாதுகாப்பதற்கான இயக்கம்” (மவ்பிம சுரகீமே வியாபாரய) என்கிற பெயரில் தெமட்டகொட பதானசர விகாரையில் ஜே.வி.பி ஒரு முன்னணியைத் தொடங்கியது. ஜே.வி. பி.யின் சோஷலிச பிக்கு முன்னணியினர் இதனை ஒழுங்கு செய்வதில் பிரதான இடம் வகித்தார்கள். இதில்தான் ஏராளமான பிக்குமார் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இலங்கையை பாரிய அளவில் உலுக்கிக் கொண்டிருந்த இயக்கம் அது.

களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிக்கு மாணவர்களான கடுகண்ணாவ சீவலி, பதுளை குணசிறி போன்றவர்களுக்கு இந்த இயக்கத்தால் மரணதண்டனை அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் படையினர் மீது அந்த பழி போடப்பட்டது. ஆனால் அன்றைய ஐ.தே.க ஆட்சியின் ஆதரவாளர்களாக இருந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட பலர் ரயர்களில் எரிக்கப்பட்டார்கள், சுட்டுக் கொல்லப்பட்டார்கள். படையினர் ஒருபுறம் சந்தேகத்தின் பேரில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை கொன்று குவித்த அதேவேளை ஜே.வி.பியின் முன்னணி இயக்கங்களும் தமது எதிரிகளாக கருதப்பட்ட அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களையும், சாதாரண பொதுமக்கள் பலரையும் கொன்றனர். அப்படி ஜே.வி. பி.யால் கொல்லப்பட்டவர்களில் பிக்குமாரும் அடங்குவர். அப்படிக் கொல்லப்பட்டவர்களின் பட்டியலை இப்போது பல நூல்கள் வெளியிட்டிருக்கின்றன.

1987 ஆம் ஆண்டு ஜே.ஆருக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து நாட்டையே ஸ்தம்பிக்க வைத்து முழு ஊரடங்கு சட்டத்துக்குள் பல நாட்கள் வைத்திருந்தது ஜே.வி.பி. அந்த ஒப்பந்தத்தையும், 13வது திருத்தச் சட்டத்தையும், மாகாணசபை முறையையும் எதிர்த்து பிக்குமார்கள் தான் முன்னணியில் களத்தில் இறக்கப்பட்டார்கள்.

28.07.1987 அன்று கொழுப்பு

# சாதியமும் குடியும் - கிழக்குக்கரையின் தாய்வழிப் பாரம்பரியம்


சிலவாரங்களுக்கு முன்கொம்புமுறி பற்றிய உரையாடலொன்றில் ஈடுபட்டிருந்தோம். அப்போது இலங்கையின் வேறு பகுதியொன்றைச் சேர்ந்த நண்பர்கள் சிலர், கிழக்கில் தாய் வழிபார்ப்பது எப்படி என்று கேட்டிருந்தார்கள். தமிழகமோ, இலங்கையோ, எங்குமே தந்தை வழியில் பூர்விகம் பார்ப்பதே வழக்கமாக இருக்க, கிழக்கில் தாய்வழியை வைத்துத்தான் பரம்பரை, பூர்வீகம் எல்லாம் பார்க்கிறார்கள் என்று நான் சொன்னது அவர்களுக்கு வியப்பாக இருந்தது. பரம்பரை பற்றி பேச வேண்டுமென்றால், சாதியம்பற்றியும் பேசியாகவேண்டும். பொதுவெளியில் அதுபோன்ற உணர்திறன் மிக்கவிடயங்களைப் பகிர்வதில் தயக்கம் இருந்தாலும், சமூகவியல் மானுடவியல் ரீதியில் முக்கியமான இந்தக் கேள்வியை தவிர்க்க முடியாமல், மேலோட்டமாக மட்டும் இதை எழுதுகிறேன்.

கிழக்கிலங்கை, கிழக்குக்கரை என்று பொதுவாகச் சொன்னாலும் இங்கு குறிப்பாகச் சொல்லப்படும் நடைமுறைகள் இன்றைய மட்டு - அம்பாறை மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை, அதிலும் ஒரிரு தமிழ் - முஸ்லீம் பழம்பெருங்கிராமங்களில் மாத்திரமே வழக்கத்திலிருப்பவை, பலஇடங்களில் அருகிப்போய்விட்டவை என்பதையும் நாம் நினைவில் இருத்தவேண்டும்.

கிழக்கின்சாதிகள், 'குடிகள்' என்ற பெயரில் உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இங்கு தனிச்சாதியாகவே கருதப்பட்டமுஸ்லீம்களுக்குள்ளும் குடிகள் உண்டு. தமிழகத்தில் சொல்லப்படும் 'கோத்திரம்' என்ற பதத்தோடு குடியை ஒப்பிடலாம். மரபாக ஒவ்வொரு சாதியிலும் ஏழுகுடிகள் இருப்பதாக சொல்லப்பட்டு வருகின்றது என்றாலும், இதில் திருத்தமான எண்ணிக்கையொன்றைப் பெறுவது கடினம். ஒரேசாதி வாழ்கின்ற இரு வேறு ஊர்களுக்குப் போனாலும், அங்கே இந்த 'ஏழு' எண்ணிக்கையில் வேறுபாடு இருப்பதைக் கவனிக்கலாம். சில ஊர்களில் ஒரேசாதியில் 20 வரையான குடிகளும் இருக்கின்றன. ஆக, குடிகளின் பெயர்கள், அவற்றின் எண்ணிக்கை, அதில் உள்ள குடித்தொகை, அதில் அதிகாரத்தில் உள்ள குடி என்பன ஊருக்கு ஊர் வேறுபடும்.

சாதிய உட்பிரிவுகளான 'குடி'கள் முன்பு இலங்கையின் ஏனைய பகுதிகளிலும்வழக்கில் இருந்திருக்க வேண்டும். இதற்கு சான்றா கயாழ்ப்பாணம் ஞானப்பிரகாசசுவாமிகளின் (17 ஆம் நூற்றாண்டு) பரம்பரையைச் சொல்லும்போது, கார்காத்தவேளாளரில்பாண்டி மழவன் குடியில் பிறந்தவர் என்ற குறிப்பைச் சொல்லலாம். சமூகப் பெறுமானமின்மையால் இந்தக் குடிகள் பின்னாளில் ஏனைய இடங்களில் வழக்கிழந்து போயிருக்கின்றன. என்றால் அவை கிழக்கில் மட்டும் முனைப்படையக் காரணம் என்ன?

கிழக்குக்கரையில் பலசாதிகள் கலந்து வாழும் ஊர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். பெரும்பாலான ஊர்கள் தனியொரு சாதியையே பெரும்பான்மையாக கொண்டவை. எனவே ஒவ்வொரு ஊரினதும் சமூக இயங்கியலை,




அங்கங்கே இருந்த சாதிய உட்பிரிவுகளான குடிகளே பங்கு போட்டுக்கொண்டன. இலங்கையின் ஏனைய இடங்களைவிட, கிழக்கில் வழிபாட்டுத்தலங்களிலும் அன்றாட வழமைகளிலும் குடிமுறைமை தொடர்ச்சியாக முக்கிய இடத்தைப் பெற்று வந்ததால், குடிவழக்கம் இங்கு தொடர்ச்சியாக நீடித்து வருகின்றது என்று ஊகிக்கமுடிகிறது.

மட்டக்களப்பில் ஒரு குழந்தையானது, அதன் தாயின் குடிசார்ந்தே இனங்காணப்படுகிறது. அந்தக் குழந்தையின் தாயின்குடி, அதன் அம்மம்மாவுடையது. இந்தவகையில், நான், என்அம்மா, என்அம்மம்மா, அவரதுஅம்மா, அவரதுஅம்மம்மா எல்லோருமே ஒரே குடியில் அடங்குகிறோம். இதில் தந்தைமாரின் எவ்விதப் பங்களிப்பும் பிள்ளைகளுக்கோ பேரர்களுக்கோ இருப்பது இல்லை.

வெவ்வேறு சாதியினர் மணமுடிக்கக் கூடாது என்பதை விட, ஒரே குடியினர்ம ணமுடிக்கக் கூடாது என்பதே கிழக்கின்கிராமப்புறங்களில் பொதுவாக எழுந்த - எழுகின்ற சாதியச் சிக்கல். ஏனென்றால் குடிகள் ஒரே பரம்பரையில் வந்தவை என்பதால், குடிகளுக்குள் அகமணம் தடை செய்யப்பட்டிருக்கிறது. புரிகிற மாதிரிச் சொன்னால், ஒருவன், தனது தாயின் அதேகுடியில் பெண்ணெடுக்க முடியாது. அதே தாயின்குடியைச் சேர்ந்த அவனது மாமன் வேறு குடியிலேயே பெண்ணெடுக்க முடியும் என்பதால் மாமியும் மைத்துனியும் வேறொருகுடியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். எனவே 'முறைமச்சினர்களை'க் கட்டலாம். அது இங்கு பரவலான இயல்பான வழக்கமாக இருந்திருக்கிறது.

அதைத் தவிர, தாய் மாமனுக்கு இங்கு கொடுக்கப்படும் மரியாதை, எல்லாத் தமிழ்ப் பகுதிகளிலும் சாதாரணமாகக் கொடுக்கப்படுவதுதான். மருமக்கட் தாயம் என்பதற்காக, கேரளம்போல, தாய்மாமனுக்கு முன்னுரிமை உள்ளகாரணவர், தறவாடுமுதலிய கட்டமைப்புகள் இங்கு இருந்ததாகத் தெரியவில்லை. மட்டக்களப்பின் முக்குவச் சட்டத்தில் அப்படி ஏதும் தாய்மாமன் உறவுக்குகூடிய முன்னுரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்றும் தெரியாது. தேடிப் பார்க்க வேண்டும்.

பெண்ணுக்கு முன்னுரிமை என்பதால், கிழக்குக்கரையின் திருமணங்களில் 'மாப்பிள்ளை பார்த்தலே' முதன்மை பெறுகிறது. ஏனைய இடங்களில்

வி. துலாஞ்சனன்

இருப்பதுபோல் 'பெண் பார்க்கப் போவது' இங்கு நடைமுறையிலில்லை. பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு வருவதுதான் முதன்மையான நிச்சயதார்த்தச்சடங்கு இங்கு. அதை 'கேட்டுப்போதல்' அல்லது '(கொழுக்கட்டைப்)பெட்டிகொண்டுபோதல்' என்பார்கள்.

இப்படி பெண்ணுக்கே முன்னுரிமை உள்ளதால், தமிழகத்தில் 'வீட்டோடு மாப்பிள்ளை' என்றுநகையாடப்படும் வழக்கம்தான் மட்டக்களப்பின் இயல்பான வழக்கமாக இருந்து வருகிறது. பிறந்த வீடு, புகுந்த வீடு எல்லாம் இங்கு ஆணுக்குத்தான். மணம் முடித்த பின்னர், மாப்பிள்ளை, பெண் வீட்டில்தான், அவள்பெற்றோரோடு நிரந்தரமாகத் தங்குவார். மாமியார் – மருமகள் சண்டைகளைவிட, இங்கு இடம்பெறும் மாமனார் - மருமகன் சண்டைகள் சுவாரசியமானவை. கீரியும்பாம்புமாக நிற்கும் இருவருமே ஆண்கள் என்பதால் கொஞ்சம் தாறுமாறானவை கூட. அல்லது நல்லபடியாக நடந்து கொண்டு மாமனாரிடம் அன்பைச் சம்பாதித்துக் கொண்ட 'பொடியன்'களும் இங்கு உண்டு. (இலக்கியத்துக்கு அருமையான கதைக்களம். இந்தக் கருவை மையமாக வைத்து கிழக்கிலங்கையின் 'எழுத்தாளர்கள்' யாரும் இதுவரை சிறுகதையோ நாவலோ முயன்றிருக்கிறார்களா, தெரியவில்லை)

சாதிய அகமணத்தைக் கட்டுப்படுத்தும் இன்னொரு வினோதமான காரணியும் இங்கு வழக்கில் இருக்கிறது. அது 'சகோதரக்குடி - மச்சினக்குடி' வழக்கம். இந்த வழக்கத்தின் படி, இரு வேறு குடிகளை ஒன்றுக்கு ஒன்று சகோதர உறவாகவும், இன்னுமிரு குடிகளை மச்சினக்குடியாகவும் கருதுவார்கள்.

உதாரணத்துக்கு இக்கட்டுரையாளனின் பிறந்தகமான தம்பிலுவில்லை எடுத்துக் கொள்வோம். அங்கு கண்டன்குடி, கட்டப்பத்தன்குடி, செருவிலிகுடி என்பன முதன்மையான மூன்று குடிகள். கண்டன் குடிக்கு ஏனைய இரு குடிகளும் 'மெச்சினக்குடிகள்' என்று சொல்லப்படுகின்றன. கண்டன்குடியில் பிறந்தபெண், இந்த இருகுடியில் எதிலும் மாப்பிள்ளை எடுக்கலாம். ஆனால் சருவிலிகுடியும் கட்டப்பத்தன்குடியும் சகோதரக்குடிகள். இவற்றில் ஒன்றில் பிறந்தபெண் இன்னொருகுடியில் மாப்பிள்ளை எடுத்தல் ஆகாது. எப்படி இந்த இரண்டு குடிக்கும் தத்தமக்குள் அகமணம் தடைசெய்யப்பட்டிருக்கிறதோ, அதேயளவு மற்றக்குடியில் மாப்பிள்ளை எடுப்பதும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

கிழக்கின் சமூகக் கட்டமைப்பில் சுவையான மற்றொரு மரபும் இருக்கிறது. சாதியொன்றின் தனிநபர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அதன் உபபிரிவுகளான குடிகளுக்குள்ளும் நுண்பிரிவுகள் தோன்றுவதற்கான ஏதுக்கள் ஏற்பட்டன. இந்த நுண் பிரிவுகளுக்கு வகுத்துவார், தத்தி, கத்தறை என்று பல பெயர்கள். குடிகளுக்குள், இந்த நுண்பிரிவுகள் இன்னும் தனிப்படுத்தப்பட்டு நெருக்கமான உறவைப் பகிர்ந்து கொள்வதைக் காணலாம்.

வகுத்துவார் (>>வயிற்றுவார் - ஒரேவயிற்றில் பிறந்தவர்கள்), கத்தறை(>>கோத்திரம்?) என்பனநேரடியாகவே, ஒவ்வொரு குடிகளுக்குள்ளும் உள்ள சந்ததிகளை அல்லது பரம்பரைகளைக் குறிப்பிடுகின்றன. 'தத்தி' என்ற பதத்தின் பயன்பாடுசற்று விரிவானது. இது ஒரு பரம்பரையை மாத்திரமன்றி, அந்தப் பரம்பரையில் பெண் எடுத்தோர், கொடுத்தோர், அவர்களது சுற்றத்தார், என்று ஒரு பரந்த கூட்டத்தாரைக் குறிக்கின்றது. எனவேவகுத்துவார், கத்தறை என்ற பதங்களைவிட, தத்தி கொஞ்சம் விரிவான சொல்லாடல். தத்தி என்பதற்கு தமிழில் பகுதி, அல்லது தொகுதி என்பது பொருள். தத்தெடுத்தல் என்ற சொல்லுக்கும் 'தத்தி'க்கும் தொடர்பு இருக்கலாம்.

நூலகம் நிறுவனத்தின் ஊர் ஆவணப்படுத்தல் திட்டத்தின் கீழ், இந்தக் கட்டுரையாளனின் பிறந்தகம் தம்பிலுவில் ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. அதன்கீழ் அவ்வூரின் சிலகுடிகளில் இன்றும் வழக்கிலுள்ள நுண்பிரிவுகளை ஆவணப்படுத்த முடிந்தது. இங்கு அவற்றை 'பாகை' என்றே பிரதானமாக அழைக்கிறார்கள். பெரும்பாலான பாகைகளின் பெயர்கள் மறைந்து விட்டன. கிடைத்த பாகைகளின் பெயர்கள் பெரும்பாலும் பட்டப் பெயர்களையோ, செல்லப் பெயர்களையோ கொண்டிருந்தன. உதாரணமாக கட்டப்பத்தான்குடியின் நான்குபாகைகள்: வண்ணக்கர் பாகை, சீனியம்பி கத்தறை, பல்லு வயிரர் தத்தி,

தொடர்ச்சி பக்கம்..15

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-18*

கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா



பேச்சுத்துறையில் இராஜதுரை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உங்களால் செய்ய முடியாதது என்ன இருக்கிறது என்று கேட்கிறேன். பாடசாலை மதிற்சுவர்களுக்குள் அடங்கிக் கிடக்கும் நீங்கள்தான் நாளை பாரின் பரிதாபக்குரலைப் போக்கும் பாசறையைப் போன்றவர்கள்.

பரீட்சைக்காக சரித்திர ஏடுகளை வரிக்குவரி பாராயணம் பண்ணும் நீங்கள் தான் வாழ்விழந்த இனத்தின் விடுதலைப் போரை நடத்தும் சரித்திரத்தை மாற்றியமைக்கும் தியாகிகளைத் தரப்போகிறவர்கள்.


விஞ்ஞான நூல்களை விழுந்து விழுந்து மனப்பாடம் பண்ணும் நீங்கள்தான் நாளை விண்ணை அளாவிய மலையையும் விண்மீனையும் விரிகடலின் அடித்தளத்தையும் ஆராயப்போகும் விஞ்ஞானிகளை உற்பத்தி செய்யப் போகிறவர்கள். தொட்டில்களை எதிர்காலத்தில் ஆட்டப்போகும் நீங்கள்தான். நாளை இவ்வுலகில் தொல்லைகளைப் போக்க துயர்களைய துரோகிகளை ஒழிக்க சுயநலமிகளை இல்லாதொழிக்க வல்ல வீரர்களையும் தீரர்களையும் சிந்தனை செல்வர்களையும் அளிக்கப் போகிறவர்கள். அகப்பை பிடிக்கும் உங்கள் கரங்கள் தான் அரசியல் சட்டங்களைத் தயாரிக்கும் தலைவர்களை அளிக்கப் போகின்றன.

உங்கள் குலம் தான் உலகம் உருண்டையென உறுதிப்படுத்திய கலிலியோவைத் தந்தது. உங்கள் குலம் தான் மதத்தின் பேரால் வயிறு வளர்த்த ஏமாளிகளின் குட்டை அம்பலப்படுத்திய இங்கர்ஷாலை அளித்தது. உங்கள் குலம்தான் அடிமை விலங்கறுத்த ஆபிரகாம்லிங்கனையும் கமால்பாட்ஷாவையும் தந்தது.

மன்னராட்சியை மாய்த்து மக்களாட்சியைப் படைக்கும் வல்லமை வாய்ந்த வார்த்தைகளை நூலாக்கிய மார்க்ஸையும் அதை நடைமுறையில் சாதித்து ஒப்பில்லாத சமுதாயத்தை உலகுக்கொரு புதுமையை உருவாக்கிய லெனினையும் ஸ்டாலினையும் மைக்கல்காலின்ஸையும் மகாத்மாகாந்தியையும் பெரியார் ஈ.வே. ராவையும் தந்தது. உங்கள் குலம்தான் தொமஸ்அல்வாஎடிஸனையும் நியுட்டனையும் டார்வீனையும் ஜன்ஸ்டனையும் அளித்தது. இவற்றையெல்லாம் நீங்கள் மறந்து விடலாகாது.

பெண்ணின் பெருமையைக் கூறும் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் பைந்தமிழ் சோலைக் குள்ளேதான் நீங்கள் நுழைய வேண்டும். மாதர்கள் கற்புநிலை மங்கையர் வாழ்க்கைமுறை பெண்களின் வீரம் அவற்றை தமிழ் நூல்களிலன்றி வேறெங்கும் காணமுடியாது. பெண்குலத்தின் பெருமைக்கு சிலப்பதிகாரம் ஓர் கலங்கரைவிளக்கம். சிலப்பதிகாரம் தமிழ் இலக்கியத்தின் தனிச்சிறப்புடையது.

போரும் காதலும் தமிழகத்தின் ஒரு முகத்தின் இருகண்களாகப் போற்றப்பட்டு காக்கப்பட்டு வந்திருக்கின்றன.. வையகத்தில் வாழ்வாங்கு வாழும் நேரிய முறையை வாழ்வின் இலக்கணத்தை வரிக்குவரி வள்ளுவர் குறளில் தந்துள்ளார். வள்ளுவர் தந்த சீரிய



வாழ்வின் இலக்கியமாக இளங்கோ சிலப்பதிகாரத்தைத் தந்துள்ளார். இளங்கோ தற்புகழ்ச்சிக்காரரல்லர். இன்றைய இலங்கையின் சரித்திர ஆசிரியர்களைப்போல் தம் இனத்தை உயர்த்தி வைத்து காப்பியம் காட்ட வேண்டுமென்று கருதியவரல்லர். இளங்கோவால் அத்தகைய குறுகிய நோக்கோடு சிலப்பதிகாரம் செதுக்கப்பட்டிருந்தால் அது குறைக் குழந்தையைப் போல குற்றுயிராய் இதுவரை செத்துத் தொலைந்திருக்கும். நாடு நகரம் செங்கோல் சிம்மாசனம் மணிமுடி அத்தனையும் உதறியெறிந்த ஒருவர் மட்டகரமான மனப்போக்குடையவராய் இருந்திருக்கமாட்டார்.

பதினாறு வயதுப் பருவப்பெண் மூன்றாம் பிறைச்சந்திரனைப் போலிருக்கிறது அவள் தோற்றம். முல்லைப்பற்களின் முறவலிலே மோகசக்தி கண்களிலே கண்டவர் மயங்கும் காந்த ஒளி வாழிப்பான உடலமைப்பிலே வசீகரம் பெண்ணுக்கிருக்க வேண்டிய அத்தகைய அழகும் அவளுக்குண்டு. அவளை ஒரு கணம் உங்கள் மனதில் இருத்திப் பாருங்கள் ஆனால் அவளிடத்திலே ஒரேயொரு குறை காணப்படுகிறது. தங்கத்தால் செய்த முத்து, பவளம், கோமேதகம், இரத்தினம், வைடூரியம் ஆகிய நவரெத்தினங்கள் பதித்து இழைத்த அட்டியல் ஒன்றை அவள் கழுத்தில் பூட்டிப் பாருங்கள். ஆஹா எப்படி அவள் கொள்ளை அழகோடு காட்சியளிக்கிறாள் என்று. வெறுங்கழுத்தோடு கிடந்த தமிழன்னையின் கழுத்திற்கு ஆரம் மணியாரம் கிடைத்தது.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி யாரம் படைத்த தமிழ் நாடு. என்று இறுமாப்பு அடைகிறார்.. இறும்பூதெய்துகிறார் பாரதி.

இவ்வளவு பெருமைக்கு இலக்கான சிலப்பதிகாரம் இரண்டு பெண்களினால் எழுந்த இறவாக்காதை. ஒன்று கண்ணகி அடுத்தது மாதவி கண்ணகி கற்பின் நிலைக்களன் மாதவி காதலின் எடுத்துக்காட்டு. கண்ணகி கண் மாதவி அக்கண்லிருந்து கிளம்பும் பார்வையொளி கண்ணகிக்குச் சொந்தமான கோவலனை மாதவி காதலிக்கின்றாள். கோவலன் மாதவியின் மாசற்ற அழகில் மயங்கிக் கிடக்கின்றான். தன்னை மறந்து மாதவியின் நெஞ்சமே தஞ்சமெனக் கிடக்கும் கோவலன் மீது கண்ணகி கொதித்தெழவில்லை.

நீதி தவறிய மன்னன் முன் நியாயம் கேட்பதைப்போல் அநீதியை அறிவிக்க அரசசபைக்கு ஏகியதைப்போல் மாதவி வீடு சென்று என் கணவனை காதலனாக வலிந்து கொள்ள உனக்கென்ன உரிமையடியென வாதிட முனையவில்லை. மாறாக கோவலன் உடல்நிலை உல்லாச வாழ்வுக்காக தன்னால் முடிந்ததைச் செய்தாள் அதிலே இன்பம் கண்டாள். காதலுக்குத் தமிழகம் கொடுத்திருந்த நிகரற்ற தனியிடத்தை கற்பின் திண்மையை கண்ணகியிடம் நாம் காணமுடிகிறது.

அந் நிலையை இளங்கோ எவ்வளவு அழகாக இப்பாட்டின் மூலம் வெளிப்படுத்துகிறார் பாருங்கள்.

திங்கள்மாலை வெண்குடையான் சென்னி செங்கோல் அது வோச்சிக் கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி கங்கை தன்னைப் புணர்ந்தலும் புலவர் தொழில் கயற் கண்ணாய் மங்கை மாதர் பெருங்கற்பென்றறிந்தேன். வாழி காவேரி.



கரிகால்வளவன் காவேரி நாட்டிற்கதிபதி. அவன் படை நடத்தி தனக்குரிய கங்கை நாட்டையும் தன் செங்கோலுக் குள் கொணர்ந்தான். எனக்குரிய கணவன் கங்கையைப் புணர்வதா? காவேரி இணங்கவில்லையாம். கற்புடைய பெண்களின் காவேரி சூழ் கன்னித்தமிழகத்துப் பெண்களின் கற்பின் தன்மையை அது விளக்கிற்றாம். அதைப்போல் ஆத்திமாலைக்கதிபன் சோழன். அவன் கன்னியாகுமரிவரையுமுள்ள தமிழகத்தை வென்றான். கயல்களை கண்ணாக உடைய காவேரியே உன் தலைவன் மற்றொரு கன்னியைப் புணர்ந்தாலும் நீ மனக்கொதிப்படைவில்லை. மாறாக மன நிறைவு பெறுவதில் மகிழ்வடைந்தாய்.

அக்கவிதை தரும் கருத்து சிலப்பதிகாரம் பற்றிப் பேசுவதனால் நீங்கள் அளித்துள்ள நேரம் போதவேபோதாது. ஆங்கிலக் கல்லூரிகளிலே அறிவு வளர்ச்சிக்காகப் பயிலும் நீங்கள் ஓய்வுநேரங்களில் அன்னை மொழிகளிலுள்ள ஏடுகளைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அல்லாவிட்டால் நம் தாய் மொழியின் இனிமையை தாயகத்தின் பெருமையை நாம் தெரிந்து கொள்ள முடியாது.

ஆங்கிலக் கல்லூரிகளிலே கல்வி பயிலும் மாணவ மாணவிகளிடம் உலகின் தலைசிறந்த இலக்கிய சிருஷ்டிகர்த்தா யார் என்று கேட்டால் உடனே சேக்ஸ்பியர் என்று பதிலளித்து விடுவீர்கள். சேக்ஸ்பியரை தெரிந்து கொண்டளவு மாற்றாந் தாயை அறிந்து கொண்டளவு செந்தமிழிலுள்ள சிருஸ்டிகர்த்தாக்களை பெற்ற தாயை அறிந்து கொள்ள இயலவில்லை. பெற்ற தாயை மறந்துவிட்டு மறைத்துவிட்டு அவள் பக்கம் திரும்பிக்கூட பார்க்காது பிற தாயைப் பெரிதாகப் பேசி மதிப்பளித்துப் பெருமைப்படுகிறோம். உங்கள் பெற்ற தாயை தெரிவிலே திண்டாட விடுவீர்களா? உங்கள் மாதாவுக்கு ஆடையளித்து அன்னம் படைக்க தயங்குவீர்களா? மாட்டீர்கள். மாட்டீர்களல்லவா? சேக்ஸ்பியரின் கவிதை நயமும் கற்பனைத்திறனும் சிறந்தவை என்பதற்குத் துளிகூட சந்தேகமில்லை. ஆனால் சேக்ஸ்பியரின் இலக்கிய சிருஸ்டிக்கு இணையான இலக்கியங்கள் தமிழில் இல்லையென்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சேக்ஸ்பியரின் பிரபல்யம் வாய்ந்த காவியங்களுள் ரோமியோ யூலியட் முதன்மை வாய்ந்தது.

ஆகாயத்திலே பால் நிலவு பொழிந்து கொண்டிருந்தது. வெள்ளை வெளிரென்று வெண்மேகக் கூட்டங்கள் நடனப் பெண்களைப்போல் நீல ஆகாயத்திலே நீந்திக் கொண்டிருக்கின்றன. முத்து முத்தாக பனித்துளிகள் கொட்டிக் கொண்டிருக்கின்றன. பனித்துளிகள் பட்டதும் காதலனைக் கண்ட கன்னிப்பெண்ணின் முகம் மலர்வதைப் போல் மலர் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்கின்றன. நிலவைத் தவழும் மேல் மாடியில் நின்றபடி ரோமியோ வரும் திசையை ஆவலோடு பார்த்த வண்ணம் நின்றாள் யூலியட்.

இயற்கையின் மோகனத் தோற்றமும் கீச்... கீச்...என்று குரலெழுப்பும் புள்ளினங்களும் அவள் ஆசை வீணையின் நரம்புகளை மீட்டுகின்றன. அதோ பூந்தோட்ட மதிலை ஏறிக்குதித்து ரோமியோ வந்து கொண்டிருக்கிறான். யூலியட்டின் உள்ளத்தில் அடைபட்டுக் கிடந்த ஆனந்த வெள்ளம் கட்டுடைத்து பிரவாகம் போல் உடம்பு பூராகவும் பரவியோடுகிறது. அந்த இன்பத்தில் திளைத்துப்போய்



நின்ற யூலியட்டின் அருகில் ரோமியோ வந்து நின்றதுகூடத் தெரியவில்லை. ரோமியோ அவள் தோளைப்பற்றிப் படுக்கையறைக்கு அழைத்துப்போனான். இறக்கை கட்டி எங்கோ ஒரு உலகத்துக்குப் பறந்து செல்வது போன்ற உணர்ச்சி வசப்பட்டு மயக்கமுறுகிறாள். மலர்கள் தூவப்பட்ட மஞ்சத்திலே ரோமியோவும் யூலியட்டும் உலகை மறந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

தொழிற்றுறை ரீதியான மற்றும் விளைவு – பயன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட உணவின் சுவை அல்லது போசணைப் பெறுமானம் நீங்கலாக, அதன் இழையமைப்பு, நிறம் மற்றும் ஆக்கக்கூறு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்ட தேவைகளைக் கொண்டு காணப்படுகின்றனர். ஒரே உணவுக்கான பல்வேறு தேவைகள் இனவிருத்தி நடவடிக்கைகளினூடாக இப்பொழுது எதிர்கொள்ளப்படக் கூடியனவாக உள்ளன. உதாரணமாக: உருளைக்கிழங்கு உணவுக்கும் தொழிற்றுறை உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும் பல்பயன்பாடு கொண்ட ஒரு பயிர் ஆகும். அதன் பல பேதங்கள் இனவிருத்தியாளர்களால் வேகவைத்தல் (Chipping) மற்றும் மாப்பொருளுக்காக விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத் தாவர வகைகள் வேறு இயல்புகளுக்கிடையே பருமன், தன்னீர்ப்பு, மற்றும் வெல்ல உள்ளடக்கம் பொரித்தலுக்கு அல்லது நறுக்குத் துண்டாக்கலுக்கு விரும்பப்படுவதில்லை. ஏனெனில் வெல்லம் உயர்வெப்பத்தில் தீய்ந்து பொரியல்களிலும் நறுக்குத் துண்டங்களிலும் விரும்பத் தகாத கபில நிறத்தைத் தோற்றுவிக்கின்றது. இதுபோன்றே வித்துக்களற்ற பழங்களான திராட்சைகள், வெள்ளரிக்காய்கள், Strawberry பழங்கள் மற்றும் கொழுப்பற்ற இறைச்சி ஆகியவற்றிற்கு ஓர் உயர்வான கேள்வி நிகழ்கின்றது. விளைவு – நுகர்வோர் தேவைகளைப் பொறுத்து விலங்கு, மற்றும் தாவர இனவிருத்தி நுட்பங்களைப் பயன்படுத்தி தரம் சேர்க்கப்பட்ட பொருட்களை விருத்திசெய்தல் சாத்தியமாக உள்ளது.

அழகியற் பெறுமானங்களையுடைய விலங்கு மற்றும் தாவர பேதங்களை விருத்தி செய்தல்

நவீன தோட்டக்கலையிலும் அலங்கார மற்றும் செல்லப்பிராணி விலங்குத் தொழிற்றுறையிலும் அழகியல் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அலங்காரத் தாவரத் தொழிற்றுறையானது, தாவர இனவிருத்தியைப் பயன்படுத்தி புதிய பூ / இலை நிறங்கள், பல்வேறு பருமன்கள், கவர்ச்சியான வடிவங்கள் போன்றவற்றைக் காண்பிக்கக்கூடிய புதிய பேதங்களை விருத்திசெய்வதில் தங்கியுள்ளது. புதுமைக்கான முயற்சி அதேமாதிரியான விழிப்புணர்ச்சியொன்றை செல்லப்பிராணி வகைகளை விருத்தி செய்வதிலும் தூண்டுகோலாகியுள்ளது. உருவவியல்புக்குரிய இயல்புகளுக்கான தேர்வு முறை இனவிருத்தி மற்றும் தொழில் ரீதியான ஆற்றல்கள் 400 நாய் கோதங்களை விருத்தி செய்து புவியில் மிகந்த பல்வகைமையுடைய இனங்களுள் ஒன்றாக ஆக்கியுள்ளன. அது போன்றே 50 முயல் பேதங்களும் பல பறவை பேதங்களும் விரிவான வீச்சில் அலங்கார மீன்களும் விருத்திசெய்யப்பட்டுள்ளன.

இனவிருத்தி நுட்டபமுறைகள்

தாவர விலங்கு இனவிருத்தியாளர்கள் சிறப்பான வசதியான இயல்புகளுடன் கூடிய புதிய பேதங்களை உருவாக்குவதற்கு பல நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த நுட்பங்களின் அநேகமானவை, இதன் பிற்புறத்தில் அமையப்பெற்றுள்ள பிறப்புரிமையியல் அறிவு இல்லாமலேயே பல நூற்றாண்டுகளாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. விவசாயத்திலும் தோட்டப்பயிர்ச்செய்கையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை தோட்டப்பயிர்ச்செய்கையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ள பரம்பரைவழியாக வந்த இனவிருத்தி நுட்பங்கள் சிலவற்றை பின்வரும் பகுதிகள் சுருக்கிக் கூறுகின்றன.

செயற்கைத் தேர்வு

செயற்கைத் தேர்வே ஆயிரக்கணக்கான வருடங்களாக மனிதரால் பயன்படுத்தப்பட்ட உயிர்த்தொழில்நுட்பவியலின் (Biotechnology) ஆரம்ப வடிவம் ஆகும். உயர் உற்பத்தி செய்யும் பேதத்தை உற்பத்திபண்ணுவதற்காக அவர்களால் விரும்பப்பட்ட இயல்புகள் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுவதற்கு ஏதுவாக தனித்துவமான இயல்புகளுடன் கூடிய தாவரங்களும் விலங்குகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தேர்வுமுறை இனவிருத்திச் செயன்முறை இதுவாகும். பிறப்புரிமையியற் பொறிமுறை போன்றே நவீன தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், தாவர விலங்கு உற்பத்திகளை முன்னேற்றியதன் மூலம் இந்த முறையானது விவசாயத்தின் மேலாக ஓர் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

செயற்கைத் தேர்வுக்கான முதல் முன்தேவை விரும்பப்படுகின்ற இயல்புகள் சார்பான மாறல் கிடைக்கப்பெறுதல் ஆகும். விரும்பப்படுகின்ற மாறலோடு கூடிய குடித்தொகை அடையாளங் காணப்பட்டதும், விரும்பப்படும் இயல்புக்காகச் சிறப்பாகச் செயற்படும் தனியன்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. உதாரணமாக: தாவரங்களில் பெரிய பழத்தின் பருமன் தெரிவு செய்யப்படும் பொழுது பெரிய பழங்களைத் தரும் தாரவங்கள் மாத்திரமே இனவிருத்தி நிகழ்ச்சி நிரலில் தேர்ந்தெடுக்கப்படும். குடித்தொகையில் எஞ்சியுள்ளவை கழிக்கப்படுகின்றன அல்லது மறுக்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட தனியன்களின் வழித்தோன்றல்கள் மேலும் மேலும் தொடர்ந்து வளர்க்கப்பட்டு விரும்பப்படும் இயல்புக்காகத் திரையிடப்படும். அதிசிறந்த விரும்பப்படும் இயல்புகளையுடைய ஒரு சீரான தாவரக் குடித்தொகை கிடைக்கப்பெறும் வரை இந்தச் செயன்முறை சில சமயங்களில் பல சந்ததிகளாக திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படும். இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தனியன்களின் பெருக்கத்தைத் தொடர்ந்து

தொடர்ச்சி... (பக்கம் -)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

பின்னங்களை வகுத்தல்

$\frac{1}{2}$ இன் நிகர்மாறு $\frac{3}{2}$

$\frac{4}{5}$ இன் நிகர்மாறு $\frac{5}{4}$

$6$ இன் நிகர்மாறு $\frac{1}{6}$

(1) $\frac{1}{2} \div \frac{3}{5}$

$\frac{1}{2} \times \frac{5}{3}$

[பின்னத்தைப் பின்னத்தால் வகுக்கும் போது, வகுக்கும் பின்னத்தை நிகர்மாற்றிய பின்னரே பெருக்க வேண்டும்.]

$= \frac{5}{6}$ //

(2) $\frac{3}{8} \div \frac{3}{4}$

$= \frac{3}{8} \times \frac{4}{3}$

[பின்னத்தைப் பின்னத்தால் வகுக்கும் போது, வகுக்கும் பின்னத்தை நிகர்மாற்றிய பின்னரே பெருக்க வேண்டும்.]

$= \frac{\cancel{3}^{1}}{\cancel{8}_{2}} \times \frac{\cancel{4}^{1}}{\cancel{3}_{1}}$

- இங்கு 3, 4 பகுதி, தொகுதி எண்களின் பொதுக் காரணியாகும்.
- பகுதி எண்ணையும் தொகுதி எண்ணையும் 3, 4 ஆல் வகுத்து, பின்னர் பெருக்க வேண்டும்.

$= \frac{1}{2}$ //

கலப்புப் பின்னங்களைப் பெருக்கும் போது, அப்பின்னத்தை முறைமையில்லாப் பின்னமாக மாற்றி, பின்னர் பெருக்க வேண்டும்..

(4) $2\frac{4}{5} \div 1\frac{2}{5}$

$= \frac{14}{5} \div \frac{5}{7}$

$= \frac{14}{5} \times \frac{5}{7}$

$= \frac{\cancel{14}^{2}}{\cancel{5}_{1}} \times \frac{\cancel{5}^{1}}{\cancel{7}_{1}}$

$= \frac{2}{1}$

$= 2$ //

பின்வரும் பின்னங்களைச் சுருக்குக. (இதிலேயே செய்துபாருங்கள்)

| | | |
|---|---|---|
| (i) $\frac{3}{4} \div \frac{5}{8}$ | (ii) $1\frac{2}{3} \div \frac{5}{3}$ | (iii) $3\frac{3}{4} \div 5\frac{5}{8}$ |

பக்க அனுசரணை

IN LUMINE TUO LUMEN

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 51

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

தமிழ்மொழியும் இலக்கியமும் III இல் இரண்டாவது வினாவில் மூன்று செய்யுள்களும் இரண்டு உரைநடைப் பகுதிகளும் தரப்பட்டிருக்கும். அவை ஒவ்வொன்றின் கீழும் இவ்விரு வினாக்கள் தரப்பட்டிருக்கும். இங்கு தரப்படுவது பயிற்சி என்பதால் வினாக்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படவில்லை.

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைப் தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை.

(அ) 'மனங்கொண்டது மாளிகை' என்னும் தொடர் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(ஆ) உப்பிலாக் கஞ்சியினை அறுசுவைபோல் நினைத்து உண்பவர்கள், எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைக் கூறுக.

(ii) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத் தார்க் குரிசிலிவ ராரென்று?
குகன் வினவக் கோக்கள் வைகு
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு
மீன்றாளை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறந்த
லாற்றுறந்த பெரியா ளென்றான்.

(அ) இங்கு 'முதற்றேவி' என்று சுட்டப்படுபவளின் பெயர் என்ன?
(ஆ) முதற்றேவியின் சிறப்பொன்றைக் கூறுக.

(iii) விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவையில்
முறையிடு நாள் வெகுளேலென்று
மரபினுக்கும் நமக்கும் உலகுள்ள அளவும்
தீராத வசையே கண்டாய்
எரிதழல் கானகம் அகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்
அரவுயர்த்தோன் கொடுமையிலும் முரசுயர்ந்தோய்
உனது அருளுக்கு அஞ்சினேனே.

(அ) 'வேத்தவை' என்பதன் பொருள் யாது?
(ஆ) 'உனது அருளுக்கு அஞ்சினேனே' என்று கூறுவதில் வெளிப்படும் சுவை யாது?

(iv) சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் படத்தொகுப்பு தனித் தனியாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப் படிமங்களும் ஒலிப்பதிவுகளும் ஓர் அர்த்தமுள்ள கோவையாக அமைக்கப்படுவது. இதைச் சினிமா இலக்கணத்துக்கு அடித்தளம் எனலாம். எப்படி இந்தக் கோவை அமைகிறதோ அந்த விதத்திலேயே அந்த நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும். காட்சிப் படிமங்களைத் தொடுக்கும் வரிசையைப் பொறுத்து அர்த்தம் மாறுகிறது.

(அ) அர்த்தமுள்ள கோவையாக அமைக்கப்படுபவை எவை?
(ஆ) அவ்வாறு அமைக்கப்படுவதைச் சினிமா மொழியில் எவ்வாறு குறிப்பிடுவர்?
(இ) சினிமா இலக்கணத்துக்கு அடித்தளமாய் அமைவது எது?
(ஈ) நிகழ்ச்சித் தொடரின் அர்த்தம் எதில் தங்கியுள்ளது?

(iv) புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு. கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது. "விலகு பிள்ளை" என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்லுமுன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம்கொடுத்தார். நாவலர் அவர்களின் நிலை – கம்பீரமான தோற்றம் – வீறுகொண்ட பார்வை – எண்ணங்களின் வேகம் - இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை" என்றார் நாவலர் அவர்கள். எல்லாரும் பிரமித்துப்போனார்கள்.

(அ) "புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு." – இங்கு, 'அவர்கள்' என்று சுட்டப்படுபவர்கள் யார்?
(ஆ) நாவலரின் சிறப்புக்கள்பற்றிக் கூறப்படுவனவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.
(இ) "அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை" - இந்த வரியினூடாகக் கம்பரைப்பற்றிச் சொல்லக்கூடியது என்ன?
(ஈ) "பிரமித்துப்போதல்" என்பதன் பொருள் யாது?

## விஞ்ஞானம்

தொடர்ச்சி...

தொடரான தேர்வினால் விரும்பப்படும் இயல்புகளுடன் கூடிய புதிய சீரானதொரு பயிர்ப்பேதம் உற்பத்திபண்ணப்படும்.

தேர்வுக்குரிய இனவிருத்தியின் அனுகூலம் யாதெனில் அது இயற்கைத் தேர்வுச் செயன்முறையைப் பயன்படுத்துவதாகும். ஆனால் இது விரும்பப்படும் இயல்புகளுடன் கூடிய, கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகளில் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது. மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எந்த விதமான பிறப்புரிமையியல் ரீதியான மாற்றியமைப்புக்களோ அல்லது தலையீடுகளோ இதில் இல்லை. அத்துடன் தாவரத்துக்கோ அல்லது விலங்குக்கோ ஆபத்து ஏற்படக்கூடிய நிலை மிகக்குறைவாகவே உள்ளது.

பெருமளவு விளைச்சலைத் தரும் தாவரங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் Corn மற்றும் சோளம் போன்ற பயிர்கள் பொதுவாக தேர்வு முறையிலேயே இனவிருத்தி செய்யப்படுகின்றன. உயர்ந்தளவான புரதம் மற்றும் தாழ்வான கொழுப்பு வீதங்களை உடைய விலங்குகளையும் உயர் போசணைப் பெறுமானங்களையுடைய தாவரங்களையும் இனவிருத்தி செய்தலானது உயர்ந்த போசணைத்தரமுடைய உணவு மூலங்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலதிகமாக, தேர்வுக்குரிய இனவிருத்தி சில தாவரங்களிலும் விலங்குகளிலும் நோய்க்கெதிரான குறைந்தளவான தடைச்சக்தி போன்ற விரும்பப்படாத இயல்புகளை வெற்றிகரமாக அகற்றியுள்ளது. எவ்வாறாயினும், விலங்குகளுக்கிடையேயான தேர்வுக்குரிய ஒனவிருத்திச் செயன்முறை செய்யப்படுவதற்கு ஒரு நீண்ட காலம் எடுக்கலாம். உதாரணமாக குதிரையின் இனவிருத்தியில், தரப்பட்ட ஒரு தரத்தையுடைய புதிய பேதம் ஒன்றை நிறுவுவதற்கு விரும்பப்படும் இயல்புகளோடு கூடிய எச்சம் 7 சந்ததிகளுக்கு மேலாக உற்பத்திபண்ணப்பட வேண்டும். இதன் கருத்து யாதெனில் விரும்பப்படும் இயல்புகள் ஒரு விலங்கின் அடிப்படைக்கூறுகளாக வருவதற்கு வருடங்கள் எடுக்கலாம் என்பதாகும்.

### உள்ளகவிருத்தியும் (inbreeding) வெளிப்புற விருத்தியும் (out breeding)

#### உள்ளக விருத்தி

பிறப்புரிமையியல் ரீதியில் ஒத்த தனியன்களுக்கிடையே நடைபெறும் இனவிருத்தி உள்ளக விருத்தி எனப்படும்.

தாவர இனவிருத்தியாளர்களிடையே "உள்ளகவிருத்தி" என்னும் சொல் பொதுவாக தன்மகரந்தச்சேர்க்கையைக் கருதுவதற்கே பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, ஒரு பூ அதன் சொந்த மகரந்தமணிகளுடன் அல்லது அதே தாவரத்தின் மேலுள்ள வேறொரு பூவிலிருந்து வரும் மகரந்தமணிகளுடன் கருக்கட்டுதல் ஆகும். பரம்பரை பரம்பரையாக ஒரே மாதிரியான உள்ளகவிருத்தியுள்ள கோதுமை, ஓட்ஸ், பார்ளி, மற்றும் புகையிலை போன்ற அனேக முக்கியமான பயிர்கள் வித்துக்களில் இருந்தே உற்பத்திபண்ணப்படுகின்றன. இவை வழமையாக தற்கருக்கட்டலைப் பெறுகின்றன. எவ்வாறாயினும், விலங்கு இனவிருத்தியில் "உள்ளகவிருத்தி" என்னும் சொல்லானது, மிக நெருக்கமான உறவினர்களிடையே நிகழும் புணர்தலைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, தந்தைக்கும் மகளுக்கும், சகோதரனுக்கும் சகோதரிக்கும் மற்றும் உடன்பிறவாச் சகோதரங்களுக்குடையே நிகழும் புணர்தல். பயிர்த்தாவரங்கள் மற்றும் பண்ணை விலங்குகள் ஆகிய இரண்டிற்கும் உள்ளகவிருத்தியானது தேவைப்படும் வகையின் ஒருசீர்த்தன்மையை ஏற்படுத்தும் அதேவேளை, விரும்பப்படும் இயல்பையும் பேணிக் கொள்ளுகின்றது. உள்ளகவிருத்தி விவசாயத்திலும் ஆய்வுச் செய்பாடுகளிலும் தூயவழிகளை விருத்திசெய்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
ஒரு விதி போன்று, உள்ளகவிருத்தி, சமநுகத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் தீங்கு பயக்கும் பின்னிடைவான பரம்பரையலகுகளை வெளிப்படுத்துகின்றது. இல்லையேல் அவை இதரநுகங்களுக்குக் கிடையே மறைந்து கொண்டிருக்கலாம். ஆகவே தொடர்ச்சியான உள்ளகவிருத்தி ஒரு குடித்தொகையின் பிறப்புரிமையியலுக்குரிய தகைமையைக் குறைக்கின்றது. இதன் பேறாக, உள்ளகவிருத்திக் குடித்தொகையின் வளர்ச்சியும் கருக்கட்டும் வளமுடைத்தன்மையும் அவற்றின் உற்பத்தித்திறன்மேல் தொடர்பாட்டுத் தாக்கத்துடன் கீழ் நோக்கிச் செல்லும். தரப்பட்ட ஒரு குடித்தொகையில், உள்ளகவிருத்தியின் பெறுபேறாக குறைக்கப்பட்ட பிறப்புரிமையியலுக்குரிய தகைமையைக் கொண்டிருக்கும் தோற்றப்பாடு உள்ளகவிருத்தி இறக்கம் (Inbreeding depression) என அழைக்கப்படும்.

எவ்வாறாயினும், விவசாயத்திலும் விலங்கு வேளாண்மையிலும் உள்ளகவிருத்தியின் அனுகூல விளைவுகள் இயலுமான அளவில் பயன்படுத்தப்படும். இதனை உறுதிப்படுத்துவதற்கு வேறெந்த அனுகூலமற்ற அம்சங்களும் இன்றி விரும்பப்படும் இயல்பை வெளிக்காண்பிக்கும் எச்சங்கள் மாத்திரம் எதிர்காலத்தில் இனவிருத்திக்குப் பயன்படுத்தப்படும். எதிர்மறையான முறையில் பாதிப்புள்ளாக்கப்பட்ட வழித்தோன்றலில் உள்ள தனியன்கள் அகற்றப்படும் அல்லது இனவிருத்திக்கு அனுமதிக்கப்படமாட்டா. இவ்வாறு அதிசிறப்பான பரம்பரையலகுகளின் திரட்சிக்கு உதவும் வண்ணம் விவசாயத்தில் உள்ளகவிருத்தி பயன்படுத்தப்படுகின்றது.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## சாதியமும் குடியு....

கொட்டான் அழகன் தத்தி என்றும், கண்டன்குடியின்நான்குபாகைகள்: வண்ணக்கர் தத்தி, தெய்வகண்டாப்போடி வகுத்துவார், நெடிய முருகச்சீயா வகுத்துவார், நாகமுத்துச் செட்டியார் தத்தி என்றும், அழைக்கப்படுகின்றன.

இந்தப் பாகைகளுக்கு இன்றும் சமூகப் பெறுமானம் இருக்கிறதா? ஓரளவு இருக்கிறது எனலாம். மட்டக்களப்பின் முதற்பெரும் தேசத்துக் கோவிலான திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி கோவிலை நிர்வகிக்கும் வண்ணக்கர், கண்டன் குடியின் வண்ணக்கர் தத்தியிலேயே பிறந்திருக்க வேண்டும். தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோவிலை நிர்வகிக்கும் வண்ணக்கர், கட்டப்பத்தன் குடியின் வண்ணக்கர் பாகையிலேயே பிறந்திருக்க வேண்டும். இந்த நடைமுறைகளில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டிருப்பதை சமகாலப் போக்குகள் சுட்டிக்காட்டுகின்றன.

தாய் வழிச்சமூகமான கிழக்கிலங்கையில், பெரும்பாலான குடிகள் மட்டுமன்றி, வகுத்துவார், கத்தறை, தத்தி போன்றன கூட என்பன ஆண் பெயரிலேயே அறியப்படுகின்றமை விந்தைதான். அது அந்த வகுத்துவாரை அல்லது கத்தறையை ஆரம்பிக்கும் குறித்த பெண்ணின் தந்தை பெயராகவோ அல்லது கணவன் பெயராகவோ அமைகிறது. இது தொடர்பில் விரிவாக ஆராய்ந்த மானுடவியலாளர் டெனிஸ்மக்கில்வ்ரே, அக்கரைப்பற்று முஸ்லீம்கள் மத்தியில் இரு வேறு பெயரில் அறியப்பட்ட தத்திகள், ஒரே பெண்ணின்கணவன் பெயராலும் தந்தைபெயராலும் அழைக்கப்பட்டதை சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதனால் சந்ததியொன்றை ஆரம்பிக்கும் பேரன்னை ஒருத்தி அடையாளமில்லாமல் மறைந்து போகும் சூழல் ஏற்படுவதுண்டு. அதைச் சுட்டிக்காட் டஇந்தக் கட்டுரையாளன்தன் சொந்த வம்சவரிப்படத்தை இங்கு இணைத்திருக்கிறான். அவனது குடி, அவனதுதாய், அம்மம்மா, அவர்பாட்டி, அவர் பாட்டியின்தாய் செம்பாத்தை என்ற வழியில் வருகின்றது. அவன் அடங்குகின்ற இந்தக்குடி நுண்பிரிவை 'அருணம்பொலியானைதத்தி' என்று அழைக்கிறார்கள். அருணம் பொலியானை என்பது செம்பாத்தையின் தந்தை அருணாசலத்தின் செல்லப்பெயர் (படத்தில்பார்க்க). பொலியானை என்றால் காலனித்துவ காலத்தில் இலங்கையில் சிறிது காலம் வழக்கில் இருந்த கிராம மட்ட காவல்துறை அதிகாரி பதவியைக் குறிக்கும்.

(என் தனிப்பட் டஆவணம் என்றாலும், சாதாரணமாகவே ஏழுதலைமுறைக்கும் மேல், தாய் வழியிலும் தந்தை வழியிலும் நீளும் வம்சவரிப்படத்தை வைத்திருக்கும் பல ஈழத்து நண்பர்கள் இதைக் கண்டு புன்னகைப்பீர்கள் என்று தெரிந்தும், அதை இங்கு பகிர்ந்து இந்தச் செய்தியைச் சொல்வதற்குக் காரணம் வரலாற்றை ஆவணப்படுத்துவதில் நாம் எவ்வளவு அக்கறை எடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டத்தான்.)

அருணம் பொலியானை தத்தியில் என் தலைமுறைவரை வாழ்ந்தோர் - வாழ்வோர் எண்ணிக்கை தோராயமாக ஐநூறைத் தாண்டுகிறது. அந்த ஐநூறு பேருக்கும் தன் கணவன் பெயரால் அடையாளம் கொடுத்த மூதன்னை அருணம்பொலியானையின் மனைவி. அவரது பெயரென்ன, அவர் பெற்றோர் பெயரென்ன, அவருக்கு சகோத ரசகோதரியர் இருந்தார்களா, எதுவுமே தெரியாது. அதை அறிவதற்கு சுமார் இரண்டரையாண்டுகள் நான்பட்ட பாடெல்லாம் விழலுக்கிறைத்தநீர். ஆவணங்களைப் பேணுவதில் இங்குள்ள எவரும் அத்தனை சிரத்தை எடுத்ததில்லை.

கிழக்குக்கரையின் தாய் வழிச்சமூகம் பற்றிய தகவல்களைப் பெருமையாகப் பகிர்ந்து கொள்ளும் இந்த இடத்தில், என்னை உருவாக்கிய ஒரு ஆணிவேர் அடையாளமின்றி தன்னை மண்ணுள் புதைத்து மறைந்து விட்டிருக்கிறது என்பதை வேதனையுடன் தான் சொல்ல வேண்டியிருக்கிறது. காலப் பெருவெள்ளத்தில் எப்போதும் அப்படித்தானே? அந்தப் பெருமாட்டியை மானசீகமாக வணங்கிக் கொள்கிறேன்.

தொடர்ச்சி...

## மின்னேரிய கோரவிபத்தில்....

இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றவுடன் படுகாயமடைந்தவர்கள் அனைவரும் அம்புலன்ஸ் மூலம் பொலநறுவை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு நல்ல சிகிச்சை வழங்கப்பட்டுவருவதாக அங்குசென்ற காயப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே அநுராதபுரம் - புத்தளம் பிரதான வீதியின் நான்காம் கட்டை பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் குழந்தை ஒன்று உட்பட மூவர் உயிரிழந்துள்ளதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

வியாழக்கிழமை பிற்பகல் 12.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேன் ஓட்டுனர் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் 3 வயதுடைய குழந்தை, குறித்த குழந்தையின் தாய் மற்றும் வேன் ஓட்டுனர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் 8 பேர் காயமடைந்துள்ளதுடன் அதில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மடு தேவாலயத்திற்கு யாத்திரை சென்ற குழுவினரே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி...

## ஜே.வி.பி.யும் பிக்கு ....

புறக்கோட்டை போதிமரத்திற்கருகில் இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களவர்களை ஒன்றுதிரட்டி நடத்திய போராட்டம் வரலாற்றில் முக்கியமான ஒன்று. பல பிக்குமார் களத்தில் இறக்கப்பட்டார்கள் அப்படியிருந்தும் அரச படை அவர்களை மோசமாக ஒடுக்கியது. இந்த ஏற்பாட்டுக்கு டீ.எம்.ஆனந்த தான் தலைமை கொடுத்தார். படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிளிபர்ட் என்கிற மாணவன் ஸ்தலத்திலேயே பலியானார்.

ஜே.வி.பியின் இரண்டாம் கிளர்ச்சிக் காலத்தில் 724 பிக்குமார் கொல்லப்பட்டனர்.

ஜே.வி.பி.யின் ஆரம்பம் தொட்டு இலங்கையின் இனப்பிரச்சினையை ஒரு வர்க்கப் பிரச்சினையாக வியாக்கியானப்படுத்தினாலும் இனவாதப் பார்வை கொண்டதாகவே அவை இருந்தன என்பதை பல இடதுசாரி முற்போக்கு சக்திகளும் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

அவர்கள் தமிழர்களின் மீதான ஒடுக்குமுறைகளை இனங்கண்டுகொள்ளவில்லை. மாறாக அவர்களின் அபிலாஷைகளை இனவாத முனைப்பாகவே கருதியதுடன், பிரிவினைவாதம் என்றும், ஏகாதிபத்தியத்தின் வேலைத்திட்டம் என்றும் வியாக்கியானப்படுத்தினர். இனப்பிரச்சினை குறித்த அவர்களின் கருத்துக்களும் செயலும் இனவாத நடவடிக்கைகளாகவே அமைந்தன.

1960களின் இறுதியில் இந்தியாவை ஐந்தாம்படை என்கிற முழக்கத்துடன் மலையக மக்களை எதிரிகளாக சித்திரித்தது, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெளிக்கிளம்பியபோது லெனினையும், மார்க்சையும், ரோசா லக்சம்பேர்க்கையும் பிழையாக வியாக்கியானப்படுத்தி, திரிபுபடுத்தி அப்போராட்டத்துக்கு எதிராக சிங்கள பௌத்தர்களை ஒன்றிணைக்கச் செய்தது எல்லாமே இதன் நீட்சி தான்.

80களில் ஜே.வி.பியிள் இயங்கியவர்கள் தான் 90 களில் நேரடியான சிங்கள இனவாத அமைப்புகளுக்கு தலைமை கொடுத்தனர். அவர்களின் சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனைக்கான பாசறையாக ஜே.வி.பி இருந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக 2000களில் "ஜாதிக ஹெல உறுமய" கட்சியாக பரிணமித்தவர்கள் 90களில் சிங்கள வீர விதான இயக்கமாக இருந்தவர்கள். 80களின் இறுதியில் "ஜனதா மித்துரோ" என்கிற பெயரில் இருந்தவர்கள். 80 களில் ஜே.வி.பியில் இருந்தவர்கள். சம்பிக்க ரணவக்க 80களில் ஜே.வி.பி.யின் இராணுவப்பிரிவில் இருந்தவர். அத்துரலிய ரதன தேரர் சோஷலிச பிக்கு முன்னணியில் இருந்தவர்.

இலங்கையின் வரலாற்றில் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பௌத்த பிக்கு பத்தேகம சமித தேரர். அவர் 2001ஆம் ஆண்டு லங்கா சம சமாஜ கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆரம்பத்தில் நவ சம சமாஜ கட்சியிலிருந்த அவர் அக்கட்சியிலிருந்து வாசுதேவ நாணயக்கார பிரிந்து சென்ற போது அவரோடு சமித்த தேரோவும் வெளியேறினார். இன்றும் மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளில் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த பிக்குமார் அங்கம் வகிக்கவே செய்கிறார்கள்.

இன்றைய அரசியலில் பிரபல ஜனநாயக செயற்பாட்டாளராக அறியப்பட்ட தம்பர அமில தேரர் ஒரு காலத்தில் ஜே.வி.பி.யின் சோஷலிச பிக்கு சங்கத்திற்கு தலைமை தாங்கியவர் தான். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக ஜே.வி.பியாழ் முன்மொழியப்பட்டவர் தம்பர அமில தேரர்.

1987 தொடங்கி 2009 யுத்தம் முடியும் வரை ஒப்பந்தங்களை முறியடிக்கவும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டவர்களில் முதன்மையானவர்கள் காவியணிந்த ஜே.வி. பி. பிக்குமாரே.

இந்த இடைக்காலத்தில் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு தலைமை தாங்கியவர்கள் பிக்குமார். காவியுடையை களைந்து புலிகளுடன். யுத்தத்துக்கு சென்ற பிக்குமார் இருக்கிறார்கள். யுத்த காலத்தில் படையணிகளுக்கு பௌத்த அனுட்டானம் வழங்கி ஆசீர்வாதத்துடன் வழியனுப்பினார்கள். யுத்தத்துக்கு நிதி சேகரித்து கொடுத்தார்கள். யுத்தத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்கள். சமாதான முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்து மூர்க்கத்தனமாக களத்தில் இறங்கினார்கள். இதில் பெரும்பங்கு ஜே.வி.பியைச் சேரும்.

ஜே.வி.பி.யின் அரசியல் போக்கில் இன்று நிறைய மாற்றம் கண்டிருக்கிறது. ஆனால் அதை மக்கள் நம்பவேண்டுமென்றால் அதற்கு முன்நிபந்தனையாக தவறுகளை ஏற்று சுயவிமர்சனம் செய்ய வேண்டும். தமிழ் மக்களிடம் வந்து சொல்வதை சிங்கள மக்களிடமும் சொல்ல வேண்டும். குறைந்தபட்சம் சுயநிர்ணய உரிமை, அரசியல் தீர்வு விடயத்தில் சுற்றி வளைக்காமல் நேரடியாக கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும்.

பௌத்த மதத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமையை பகிரங்கமாக விமர்சிக்க முன்வரவேண்டும். அந்த முன்னுரிமையை நீக்கி மதச்சார்பற்ற நாடாக ஆக்குவோம் என்கிற கொள்கையை பகிரங்கமாக சிங்கள பௌத்தர்கள் மத்தியில் கூறவேண்டும், அதற்கான விழிப்புணர்ச்சியையும், அரசியல் வழிநடத்தலையும் அங்கு செய்ய வேண்டும்.

பிக்குமார்களின் இனவாத அட்டூழியங்களை உரிய நேரங்களில் தட்டிக் கேட்காமல் இருப்பதன் காரணம் இனவாதமா? அல்லது அவர்களை பகைக்கக் கூடாது என்கிற கொள்கையா? அல்லது வாக்கு வங்கி பற்றிய பயமா? இதில் எது காரணமாக இருந்தாலும் ஒரு புரட்சிகர கட்சி என்கிற தகுதியை ஜே.வி. பி. இழந்துவிடும். ஜே.வி.பி சிங்கள பௌத்த தொழிலாளர்களுக்கான கட்சியா அல்லது அனைத்து ஒடுக்கப்படும் மக்களுக்குமான கட்சியா என்பதை இனியாவது தாமதமின்றி வெளிப்படுத்தியாகவேண்டும்.

பிக்குமார்களைக் கண்டித்திருக்கிறோம் என்று எங்கேயோ ஓரிரு சிறு உதாரணங்களைக் கொண்டுவந்து காட்டும் சாக்குபோக்கு வேண்டாம்.

# அக்கினி புலையவெளி

## உணவு உற்பத்திப் பொருட்கள்

**சைவ முறையில் தயாரிக்கப்பட்டது**

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல:- 0771516203**

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்

## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 196,Trinco Road, Batticaloa